பி.டி. கத்தரிக்காய் கர்நாடக அரசு அவசரம் காட்டாது: முதல்வர் எடியூரப்பா

First Published : 21 Jan 2010 12:08:00 AM IST



பெங்களூர், ஜன.20: மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காயை அனுமதிப்பது தொடர்பான விவகாரத்தில் மாநில அரசு அவசரம் காட்டாது என்று கர்நாடக முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.

பி.டி. கத்தரியை நாட்டில் வணிக ரீதியில் அனுமதிக்கக் கூடாது என்று ஒரு தரப்பினரும் அனுமதிக்கலாமென மற்றொரு தரப்பினரும் கூறிவருகின்றனர்.

பி.டி. கத்தரிக்காயை அனுமதிப்பதா வேண்டாமா என்று பொதுக்கூட்டங்களை பெருநகரங்களில் நடத்தி மக்களிடம் கருத்துகளைக் கேட்டு வருகிறது மத்திய அரசு. இதுபோல கருத்துக் கேட்புக் கூட்டம் பெங்களூரில் இன்னும் சில தினங்களில் நடக்க உள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து எடியூரப்பா கூறுகையில், பி.டி. கத்தரிக்காய்க்கு ஆதரவு, எதிர்ப்பு வலுத்து வருகிறது. இதுகுறித்து மக்களிடம் மத்திய அரசு கருத்து கேட்டு வருகிறது. இந்த கத்தரிக்காயை அனுமதிக்கும் விவகாரத்தில் மாநில அரசு அவசரம் காட்டாது.

அந்தக் கத்தரிக்காயின் நன்மை, தீமைகள் குறித்து விஞ்ஞானிகளுடன் விரிவாக விவாதித்து பிறகு முடிவெடுக்கப்படும் என்றார்.

**வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்புக்கு காப்பீடு**

First Published : 21 Jan 2010 07:07:25 AM IST

திண்டுக்கல், ஜன. 20: தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அனைத்து விதமான உணவுப் பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் வருடாந்திர வணிக தோட்டக் கலைப் பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகிறது. அனைத்து வகையான இயற்கைச் சீற்றங்கள் மற்றும் வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்புக்கு இத் திட்டம் மூலம் காப்பீடு கிடைக்கும்.

குத்தகைதாரர்கள் வங்கிக் கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் உள்பட அனைத்து விவசாயிகளும் இத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். சராசரி மகசூலின் 150 சதவீதம் வரை காப்பீடு செய்ய முடியும். தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் மத்திய, மாநில அரசின் பரிந்துடையுடன் அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா மூலம் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை இத் திட்டத்தின் மூலம் ரூ. 116 கோடி பிரிமியம் பெறப்பட்டுள்ளது. 2000 முதல் 2008 ஆம் ஆண்டு வரை ரூ. 1,171 கோடி இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 8 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு 50 சதவீதம் பிரிமியத்தில் மானியம் அளித்துள்ளது. விவசாயிகள் அவரவர் கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும். மேலும் இழப்பீடு பெறும்போது அந்த வங்கியின் மூலம் அவரது கணக்கில் வரவு வைக்கப்படும்.

நஷ்டஈடு வழங்கும் முறை: ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரத்திலும், பிர்காவிலும் மாநில அரசின் விவசாயத் துறையினால் பயிர் அறுவடை காலத்தில் சோதனைகள் நடத்தப்பட்டு, நடப்பு பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டு கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும்போது நடப்புப் பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைதிருக்கின்றதோ, அந்த விகிதப்படி அந்த வட்டாரத்தில் உள்ள காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் காப்பீடு செய்த தொகைக்கு ஏற்பட நஷ்டஈடு வழங்கப்படும். பயிர் கடன்பெறாத விவசாயிகள் முன்மொழிவு படிவத்துடன், கணினி சிட்டா அல்லது அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து சான்றிதழ் பெற்று அவர்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பிரிமியத்தை குறிப்பிட்ட தேதிக்கு முன் செலுத்த வேண்டும். முன்மொழிவுப் படிவங்கள் விவசாயத் துறையிடமும், கூட்டுறவு வர்த்தக வங்கியிலும் பெறலாம் என அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனியின் மண்டல மேலாளர் சி. அன்பரசு தெரிவித்துள்ளார்.

**பால் விலை உயர்வை முடிவு செய்யவேண்டியது மாநிலங்களே: சரத் பவார்**

First Published : 20 Jan 2010 12:00:00 AM IST



புது தில்லி, ஜன. 20: பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் பால் விலை உயர்வு குறித்து மாநிலங்கள்தான் முடிவு செய்யவேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.

பால் உற்பத்தியை அதிகரிக்க மாநிலங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் பால் தட்டுப்பாடு வெகுவாக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தில்லியில் புதன்கிழமை நிருபர்களிடம் அவர் கூறியதாவது:

வட இந்தியாவில் பால் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. பால் கொள்முதல் தேவைக்கேற்ப பால் விலையை மாநிலங்கள் உயர்த்திக் கொள்ள வேண்டும். விலை உயர்வு குறித்து மாநிலங்கள்தான் முடிவு செய்யவேண்டும். மத்திய அரசு இதில் முடிவு ஏதும் எடுக்கமுடியாது. கடந்த அக்டோபரில் சில மாநிலங்கள் பால் விலையை உயர்த்தின. அதனால் அங்கு பால் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது. தற்போது பால் தட்டுப்பாடு மீண்டும் தலைதூக்கியுள்ளதால் அதற்கேற்ப விலை உயர்வை மாநிலங்களே நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

பால் பொருள்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு பால் கொள்முதல் செய்வதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே உடனடியாக விலை உயர்வை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு மாநிலங்கள் தள்ளப்பட்டுள்ளன.

பால்வளத் துறை மேம்பாட்டுக்காக மத்திய அரசிடம் உள்ள நிதியை மாநிலங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாநிலங்கள் அவற்றை பெறாததால் அதற்கான நிதி மத்திய அரசிடம் வெறுமனே உள்ளது. பால்வளத் துறை மேம்பாட்டுக்காக நடப்பு ஐந்தாண்டு திட்டத்துக்கு ரூ.550 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம், மேகாலயம், சிக்கிம், மகாராஷ்டிரம், கர்நாடகம், மேற்கு வங்கம், சத்தீஸ்கர், உத்தரகண்ட், கோவா, அசாம் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்கள் இந்த நிதியை இதுவரை பயன்படுத்தவில்லை.

2020-ம் ஆண்டில் இந்தியாவின் பால் தேவை 166 மில்லியன் டன். ஆனால் தற்போதைய உற்பத்தி 108.5 மில்லியன் டன்னாக உள்ளது. இதனால் குழந்தைகளுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைக்கும் வகையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மாநிலங்கள் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாநிலங்கள் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளது. அதற்கேற்ப மத்திய திட்டங்களை அவைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது தேவைக்கான பால் உற்பத்தியை உள்நாட்டிலேயே மேற்கொள்ள தவறினால் பால் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடும் என்றார்.

**விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்**

First Published : 21 Jan 2010 01:56:25 AM IST

திருவண்ணாமலை, ஜன. 20:வேளாண்மைத் துறை சார்பில் திருவண்ணாமலை  வட்டாரத்தில் விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடந்தது.

சு.பள்ளியம்பட்டு, காவேரியாம்பூண்டி கிராமங்களில் சிறுதானியம், பயறுவகை, பயிர்களில் தரமான விதை உற்பத்திக்கு வளர்ச்சிப் பருவத்தில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் மற்றும் விதை சான்று நடைமுறைகள் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண்மை இணை இயக்குநர் நெ.கோமதிநாயகம், விதைச் சான்று இயக்குநர்  அ.சுப்பிரமணி, உதவி இயக்குநர் அ.பாலா ஆகியோர் விதை கிராமத் திட்ட செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர்.

பள்ளியம்பட்டு கிராமத்தில் வேளாண் அலுவலர்கள் குணசேகரன், கண்ணன் ஆகியோரும், காவேரியாம்பூண்டி கிராமத்தில் வேளாண் அலுவலர் கண்ணகி, கார்த்திகாயினி ஆகியோரும் தொழில்நுட்ப விளக்கம் அளித்தனர்.

**7 இடங்களில் குறுவை மற்றும் சம்பா நெல் கொள்முதல் நிலையங்கள்**

First Published : 21 Jan 2010 01:24:00 AM IST

விழுப்புரம், ஜன. 20: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நடப்பு கரீப் பருவம் குறுவை மற்றும் சம்பா நெல் கொள்முதல் நிலையங்கள் 7 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளதாக மண்டல மேலாளர் மு. குணசேகர் தெரிவித்துள்ளார்.

÷இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரகண்டநல்லூர், ரிஷிவந்தியம் ஆகிய இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களும், திருக்கோவிலூர், செஞ்சி, வானூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் வட்ட செயல்முறை கிடங்குகளும் திறக்கப்பட்டுள்ளன.

÷இங்கு முதல் தர நெல் குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத்தொகை உள்பட ரூ.1,100, பொது ரக நெல்லுக்கு ரூ.1,050 என கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

÷விவசாயிகள் தங்களிடம் விற்பனைக்கு தயாராக உள்ள தரமான நெல்லை அருகில் உள்ள வட்ட செயல்முறை கிடங்கு மற்றும் நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடையலாம் என்று தெரிவித்துள்ளார்.

**தேவகோட்டை பகுதியில் நெல் அறுவடை இயந்திரங்கள்**

First Published : 21 Jan 2010 07:23:20 AM IST

தேவகோட்டை,ஜன.20: தேவகோட்டை பகுதியில் கதிர் அறுக்கும் இயந்திரங்கள் வந்து குவிந்துள்ளன. கடந்த ஆண்டு பொங்கல் சமயத்தில் அறுவடை முடிந்துவிட்டது. ஆனால் இந்த ஆண்டு பருவமழை தாமதமாகப் பெய்ததால் விவசாயப் பணிகள் மிகவும் தாமதமாகத்தான் துவங்கின.

தற்போதுதான் அறுவடை செய்யும் நிலை வந்துள்ளது. பெரும்பாலான இடங்களில் இன்னும் பதினைந்து நாள்கள் கழித்துதான் அறுவடை செய்ய முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அறுவடையை கருத்தில்கொண்டு அறுவடை செய்யும் இயந்திரங்கள் வடக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரத் துவங்கி விட்டன. நாள் ஒன்றுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட இயந்திரங்கள் தேவகோட்டை வழியாக ராமநாதபுரம் மாவட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்குச் செல்கின்றன.

**பூமியைக் காக்கும் பொறுப்பு மாணவ, மாணவியருக்கு உண்டு**

First Published : 21 Jan 2010 09:00:48 AM IST

ஈரோடு, ஜன.20: பூமியைக் காக்கும் பொறுப்பு பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியருக்கு உண்டு என்று தமிழக பசுமை இயக்கத் தலைவர் வி.ஜீவானந்தம் கூறினார்.

ஈரநிலம் அமைப்பு சார்பில் புவியைக் காப்போம் என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சி ஈரோடு திருநகர்காலனி சித்தார்த்தா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் புதன்கிழமை நடைபெற்றது. தொழிலதிபர் எஸ்.கே.ஷங்கர் குத்து விளக்கேற்றி வைத்தார். தமிழக பசுமை இயக்க நிர்வாகி ஜெ.சிவக்குமார், தொழிலதிபர்

எஸ்.சிவானந்தம், வி.சுக்கிரா அறக்கட்டளைச் செயலர் கே.ரவிச்சந்திரன், பள்ளி முதல்வர் முகமதுகெப்ஸ் முன்னிலை வகித்தனர். கண்காட்சியைத் துவக்கி வைத்து ஜீவானந்தம் பேசியது:

கடந்த தலைமுறை செய்த தவறுகளால் இயற்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. காட்டை அழித்தது, கான்கிரீட் கட்டடங்களின் வளர்ச்சி, அதிக அளவு புகையை வெளியிட்டது ஆகியவற்றால் புவிமண்டலம் கடுமையாக வெப்பமடைந்துள்ளது. இதனால் பனிமலைகள் உருகி, கடல்மட்டம் உயர்ந்துள்ளது.

இமயமலையில் உள்ள பனிக்கட்டிகளே உருகும் நிலைக்கு உள்ளாகியுள்ளன. கடல் மட்டம் தொடர்ந்து உயருமானால் கடற்கரை நகரங்கள் முற்றிலுமாக அழிந்துவிடும். பருவ மாற்றங்களினால், மழையளவு குறைந்துவிட்டது. இதனால் உணவு விளைச்சல் குறைந்து, பசி, பட்டினியால் அவதியுறும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும். ஏற்கனவே ரசாயன உரங்களால் உணவை விஷமாக்கியுள்ளோம். உணவு தானியப் பற்றாக்குறையும் ஏற்பட்டால், மக்கள் அன்றாட உணவுக்கே அவதியுறும் சூழல் உருவாகிவிடும்.

நிலநடுக்கம், சுனாமி போன்ற இயற்கை பேரழிவுகளால் லட்சக்கணக்கில் மக்கள் உயிரிழக்க நேரிடுகிறது. சுற்றுச்சூழலைக் காக்கத் தவறிவிட்டால் இயற்கை பேரழிவுகள் நேரிடுவதைத் தவிர்க்க முடியாததாகிவிடும். நீலகரி மலைப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவு இதற்கு சமீபத்திய உதாரணமாகும்.

சுற்றுச்சூழலைக் காக்க மரங்களை நட்டு வைத்து, அவற்றை உரிய முறையில் வளர்ப்பது மிகவும் அவசியமாகும். சம்பிரதாயத்துக்கு மரக்கன்றுகளை நட்டுவைத்துவிட்டு, அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பது சரியல்ல. முந்தைய தலைமுறையில் தவறை சரி செய்ய வேண்டியது இளைய தலைமுறையி0ன் பொறுப்பு. ஒவ்வொரு மாணவரும் ஒரு மரக்கன்றை நட்டு வைத்து, அதை பராமரிக்க வேண்டும். கோடை விடுமுறையிலாவது இப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்றார் ஜீவானந்தம். ஏராளமான மாணவ-மாணவியர் இயற்கை விழிப்புணர்வு ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

### வனக் கோட்டம் சார்பில் நீலகிரியில் 30 ஆயிரம் மரக் கன்றுகள் நட திட்டம்

First Published : 21 Jan 2010 08:55:38 AM IST

உதகை, ஜன.20: நீலகிரி மாவட்டத்தில் வனப்பகுதிகளில் இயற்கை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மாவட்ட வடக்கு வனக் கோட்டத்தின் சார்பில் நடப்பாண்டில் 30,000 மரக்கன்றுகளை நட திட்டமிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் யானைகளின் வழித்தட பாதைகளாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிலங்களை அரசு கையகப்படுத்தும்போது, அந்த பகுதிகளில் புதிதாக இந்த இயற்கை மரக்கன்றுகளை நடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக நீலகிரி வடக்கு வனக் கோட்டத்திற்குட்பட்ட சிறியூர் மற்றும் ஆனைகட்டி ஆகிய பகுதிகளில் சந்தனம், நாவல், ஈட்டி, சீகைக்காய், ஆல், அத்தி, அரசு மற்றும் இச்சி உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட வகைகளிலான மரக்கன்றுகளை உருவாக்கும் வகையில் புதிதாக நர்சரி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நர்சரியில் தற்போது சுமார் 30,000 மரக்கன்றுகள தயார் நிலையிலுள்ளன.

வனத்துறையின் நர்சரியில் உள்ள இந்த மரக்கன்றுகள் சுமார் 3 மாத வயதுடையவைகளாகும். இவற்றிற்கு மேலும் 3 மாதம் கடந்த பின்னர் மழைக்காலம் தொடங்கும் தருவாயில் அவற்றை வனப்பகுதிகளில் நட்டுவிடத் திட்டமி0ட்டுள்ளனர். இதற்கான பகுதிகளாக ஆனைகட்டி மற்றும் சிறியூர் ஆகிய வனப்பகுதிகள் தெரிவு

செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இப்பகுதிகளில் எந்தெந்த இடங்களில் எந்தெந்த மர வகைகளை நடுவது என்பது குறித்து தற்போது அவற்றிற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

குறிப்பாக மிகவும் விலை உயர்ந்த மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய மர வகைகளான சந்தனம் மற்றும் ஈட்டி மர வகைகளை அவை வளரும்போது எத்தகைய இடையூறும் இல்லாமலிருக்கும் வகையில் எப்பகுதிகளில் அவற்றை நடுவது என்பது குறித்து வனத்துறையினர் கள ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்த நர்சரியில் சுமார் 2,000 சந்தன மரக்கன்றுகள் மற்றும் ஈட்டி மரக்கன்றுகள் தற்போது தயார் நிலையிலுள்ளன.

இத்தகைய மர வகைகள் மாவட்டத்தில் சமவெளிப் பகுதிகளில் அதிக வெப்பமான இடங்களில் மட்டுமே வளரும் தன்மை கொண்டவை என்பதால் வடக்கு வனக்கோட்டத்திற்குட்பட்ட சிறியூர் மற்றும் ஆனைகட்டி ஆகிய பகுதிகளில் மட்டும் இந்த மரக்கன்றுகளை நட திட்டமிட்டுள்ளதாக சீகூர் வனச்சரகர் மரியராஜ் மற்றும் வனவர் பாப்பண்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.

தங்களது முயற்சியின் முதற்கட்டமாக மாவட்ட வன அலுவலர் சவுந்திரபாண்டியனின் உத்தரவின் பேரில் தற்போது 2,000 தேக்கு மரக்கன்றுகளும் வாழைத்தோட்டம் மற்றும் சிறியூர் பகுதிகளில் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நீலகிரி மாவட்டத்தை இயற்கை மரக்காடுகள் நிறைந்த மாவட்டமாக மாற்றும் முயற்சியில் முதற்கட்டமாக நீலகிரி வடக்கு வனக்கோட்டத்தின் சார்பில் 30,000 மரக்கன்றுகளை உருவாக்கும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த மரக்கன்றுகள் முழுமையாக நடப்பட்டு அவை வளர்ந்தால் வடக்கு வனக்கோட்டப் பகுதியே பசுமை நிறைந்த காடாகி விடும் என்பது உறுதி.

### மானிய விலையில் நெல் அறுவடை இயந்திரம்

First Published : 21 Jan 2010 01:27:05 AM IST

கடலூர், ஜன. 20: மாநிலத்தில் முதல் முறையாக மானிய விலையில் நெல் அறுவடை இயந்திரம் கடலூர் மாவட்டத்தில் புதன்கிழமை வழங்கப்பட்டது.

÷தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மானிய விலையில் வேளாண் இயந்திரங்களை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) எஸ்.நடராஜன் வழங்கினார்.

÷கடலூர் மாவட்ட வேளாண் பொறியியல் துறை மூலம் ரூ. 20 லட்சம் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் 6 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இதற்காக அரசு வழங்கும் மொத்தம் மானியம் ரூ. 5.58 லட்சம்.

÷நெல் அறுவடை இயந்திரம் ஒன்று, களை எடுக்கும் இயந்திரம் ஒன்று, நடவு இயந்திரம் ஒன்று, சுழல் கலப்பை இயந்திரம் 3 வழங்கப்பட்டன. அறுவடை இயந்திரம் நடப்பு ஆண்டில் மாநிலத்தில் முதல் முறையாக கடலூரில் அரசு மானியத்தில் வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

÷ரூ. 13.77 லட்சம் மதிப்புள்ள அறுவடை இயந்திரம் ரூ. 4 லட்சம் மானியத்தில் டி.குமராபுரம் செந்திலுக்கு வழங்கப்பட்டது. ஏனைய வேளாண் இயந்திரங்கள் புதுக்குப்பம் சதாசிவம், தாணூர் ஆதிகேசவலு, சேடப்பாளையம் சண்முகம், கிளிஞ்சிக்குப்பம் பத்மநாபன், தூக்கணாம்பாக்கம் சேகர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

÷வேளாண் இயந்திரங்களை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) எஸ்.நடராஜன் பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மணி, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அரியபூபதி, உதவி செயற்பொறியாளர் பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கால்நடைகளில் பசுந்தீவனப் புரட்சி

ரா. முருகேசன்First Published : 21 Jan 2010 12:00:00 AM IST

விவசாய நாடாக விளங்கும் நமது இந்தியாவில் கால்நடைப் பராமரிப்பை கிராமப்புறங்களில்  மூலத்தொழிலாகவும், சில பிரிவினர் துணைத் தொழிலாகவும் மேற்கொண்டுள்ளனர்.

உயர்ரகப் பசுக்களைப் பராமரித்து அதிக அளவு பால் உற்பத்தியைப் பெருக்கி வருகிறோம். ஏழைகளின் பசு என்றழைக்கப்படும் வெள்ளாடு பராமரிப்பால், குறைந்த முதலீட்டில் அதிக அளவு லாபம் பெறலாம்.

ஆடுகள் பராமரிப்பதற்கு ஆகும் செலவு மற்ற கால்நடைப் பண்ணைகளின் முதலீடுகளைக் காட்டிலும் மிகக்குறைவு. ஓர் ஆட்டிலிருந்து ஓராண்டுக்குக் கிடைக்கும் சாணமும், சிறுநீரும் அரை ஏக்கர் நிலத்துக்கு உரமாக்கப் போதுமானது. வேகமாக வளரும் தன்மையுடைய இறைச்சிக்கோழிகள் பண்ணை மூலம் குறுகிய காலத்தில் அதிக லாபம் பெறலாம்.

÷ஒரு தேசத்தின் மாண்பும், நற்பண்பின் வளர்ச்சியும் அந்த நாட்டின் கால்நடைகளைப் பேணுவதிலிருந்து அறிய முடியும் என மகாத்மா காந்தியடிகள் கூறியதன் மூலம் கால்நடைப் பராமரிப்பின் சிறப்பை உணர முடிகிறது.

÷பெருகிவரும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்பவும், மாறிவரும் காலச்சூழலுக்கு ஏற்பவும், அதிகரித்துவரும் மக்கள் நெருக்கடிக்கு ஏற்பவும் இப்போதைய சூழலில் விவசாய நிலங்கள் எல்லாம் வீட்டுமனைகளாக மாறி வருகின்றன.

÷இந்நிலையில் மனிதனுக்குத் தேவையான இடுபொருள்களின் உற்பத்திக்கே போதுமான நிலம் இல்லையென்கிற விதத்தில் கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் புற்களின் உற்பத்தி மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே காலச்சூழ லுக்கேற்ப கால்நடைகளின் தீவனத்துக்கு மாற்று வகைகளை நாம் சிந்திக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

மேற்கூறியவைகளின் அடிப்படையில் கால்நடைகளுக்கு மர இலைகளைத் தீவனமாக அளிக்க நாம் பழக்கப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகிறது. மேய்ச்சலை மட்டுமே மையமாக வைத்து வளர்க்கப்படும் கால்நடைகள் பெரும்பாலும் புரதம் அல்லது எரிசத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருக்கும். வறட்சி மற்றும் கோடைக்காலங்களில் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்துப் பற்றாக்குறை ஏற்பட்டு அவை உடல் எடையை இழந்து உற்பத்தியையும் குறைக்கின்றன. இந்நிலை மாற வேண்டுமானால் கோடையிலும், பசுமை செழித்து இருக்கும் மரங்களின் இலைகளைத் தீவனமாகக்  கால்நடைகளுக்கு அளிக்க வேண்டுதல் அவசியமாகிறது.

தீவன மரங்கள் என்பது துளிர், இளம் கிளைகளுடன் கூடிய இலைகள் மற்றும் அதிலுள்ள காய்கள், பழங்கள், விதைகளை கால்நடைகளுக்குக் கொடுக்கக் கூடியனவாகும்.

÷மர இலைகளில் பொதுவாக 10 முதல் 18 சதவிகிதம் புரதச்சத்தும். சுபாபுல், அகத்தி போன்ற மரங்களின் இலைகளில் 20 முதல் 35 சதவிகிதம் புரதச்சத்தும் உள்ளது. ஆனால் ஆடு மாடுகளுக்கு எரிசத்தை அளிக்கும்

நார்ச்சத்து புற்களில் இருப்பதைவிட மர இலைகளில் குறைவாக உள்ளது. மர இலைகளையே முழுத்தீவனமாக உட்கொள்ளும் ஆடு மாடுகளுக்கு எரிசத்தை அளிக்கவல்ல புற்கள், வைக்கோல் போன்றவற்றைச் சேர்த்து அளிப்பதால், மர இலைகளை உட்கொள்வதால் ஏற்படும் எரிசத்து பற்றாக்குறையைப் பெருமளவு போக்கலாம். கால்நடைகளுக்குக் கோதுமை அல்லது அரிசித் தவிட்டைத் தீவனத்தில் சேர்ப்பதால் தவிட்டில் உள்ள மணிச்சத்து மரஇலைகளில் உள்ள சுண்ணாம்புச்சத்துடன் சேர்ந்து முழுமையாகக் கால்நடைகளுக்குக் கிடைக்கும்.

÷கால்நடைகளுக்கு மரஇலைகளை மட்டும் தீவனமாக அளிக்காமல், மர இலைகளுடன் புற்கள், வைக்கோல் போன்றவற்றையும் தவிட்டையும் சேர்த்து அளித்தால் ஓரளவு சமச்சீர் தீவனம் கிடைக்கும். இதனால் அவற்றின் உற்பத்தியும் அதிகரிக்கும்.

பொதுவாக மாடுகளுக்கு அவை உண்ணும் தழைத் தீவனத்தில் 30 சதவிகிதம் மர இலைகளை அளிக்கலாம். நாளொன்றுக்கு 12 முதல் 15 கிலோ பசும் இலைகள் தேவைப்படும். ஆடுகளுக்கு தழைத்தீவனத்தில் 50 சதவிகிதம் வரை மர இலைகள் தேவைப்படுகின்றன. வளர்ந்த ஓர் ஆட்டுக்கு 2 முதல் 3 கிலோ மர இலைகள் நாளொன்றுக்குத் தேவைப்படுகிறது.

நமது பகுதிகளில் உள்ள கருவேல், வெளிவேல், வாகை, பில்லவாகை, பலா, பீனாரி, வேம்பு, பூவரசு, ஆல், அரசு, ஆயா, உத்தி, சவுண்டல், முருங்கை, கிளாசிடியா, புளி, இலந்தை, கொடுக்காப்புளி, கல்யாண முருங்கை, அகத்தி, உசிலம், சீமைக்கருவேல் ஆகிய மரங்கள் தீவன மரங்களாகக் கருதப்படுகின்றன.

தீவன மர இலைகளில் டேனிக் அமிலம் உள்ளதால் முதல் ஓரிரு நாள்களுக்குச் சரியாக உண்ணாமல் இருக்கும். பழகிய பின் நன்கு உண்ணும் திறனுடையதாக விளங்கும். ஒரு சில காரணங்களால் கால்நடைகள் சில மர இலைகளை விரும்பி உண்ணாது. அதனைப் பழக்கப்படுத்த கீழ்க்குறிப்பிட்ட சில வழிமுறைகளைக் கையாளலாம். மர இலைகளைப் பிற புற்களுடன் சிறிது சிறிதாகச் சேர்த்து அளித்து கால்நடைகளுக்குப் பழக்கப்படுத்த வேண்டும்.

காலையில் வெட்டிய இலைகளை மாலையிலும், மாலையில் வெட்டிய இலைகளை அடுத்த நாள் காலை வரையிலும் வாட வைத்து பிறகு தீவனமாக அளிக்க வேண்டும்.

மர இலைகளை நிழலில் காய வைத்து அவற்றின் ஈரப்பதத்தை சுமார் 15 சதவிகிதத்துக்கும் கீழே குறைத்துப் பின்பு தீவனமாக அளிக்க வேண்டும். மர இலைகள் மேல் சுமார் 2 சதவிகிதம் சமையல் உப்புக் கரைசலைத் தெளித்து பின்பு தீவனமாக அளிக்கலாம். மர இலைகளின் மீது வெல்லம் கலந்த நீரைத் தெளித்தும் தீவனமாக அளிக்கலாம்.

மர இலைகளை விரும்பி உண்ணும் கால்நடைகளையும், விரும்பாத கால்நடைகளையும் அருகருகே கட்டி வைத்து தீவனம் அளிக்கலாம். மர இலைகளைத் தீவனமாகக் கால்நடைகளுக்கு அளிக்கும்பொழுது தினமும் சிறு சிறு அளவில் அளித்து அவற்றைப் பழக்கப்படுத்த வேண்டும். கால்நடைகள் எப்போதும் ஒரே வகையான மர இலைகளை விரும்புவது இல்லை. ஆகையால் பல்வேறு மரங்களின் இலைகளை அளிப்பது நல்லது.

÷கால்நடைகளுக்கு மக்காச்சோளம், சோளம், தீவனக்கம்பு போன்றவை தானிய வகைகளாகவும், கம்பு, நப்பிய ர் ஒட்டுப்புல், கினியாப்புல், எருமைப்புல், கொழுக்கட்டைப்புல், தீனாநாத் புல் போன்றவை புல்வகைகளாகவும், முயல்மசால்,வேலி மசால், தீவனதட்டைப்பயிறு, ஆட்டுமசால், சங்குப்பூ போன்றவை பயிறுவகைகளாகவும் சுபாபுல், வாகை, வேம்பு, அகத்தி உள்ளிட்டவை தீவன மரவகைகளாகவும் தீவனமாக அளிக்கப்படுகின்றன.

கோடை மற்றும் வறட்சிக் காலங்களில் தீவனப்பற்றாக்குறை அதிகம் காணப்படுவதால், ஏழைவிவசாயிகள் பாதிக்கப்படுவதை கால்நடைகளுக்கு மர வகைகளைத் தீவனமாகப் பயன்படுத்தி போக்க முடியும். உடைத்த இறுங்குச் சோளம், கேழ்வரகு, கம்பு, சாமை, கோதுமை, கொள்ளு ஆகியவற்றை மக்காச்சோளத்துக்குப் பதிலாக 50

சதவிகிதம் வரை தீவனத்தில் அளிக்கலாம். அரிசித்தவிடு, கோதுமைத் தவிடு, அரிசிக்குறுநொய், உளுந்து, பயிறு, கடலைப் பொட்டு ஆகிய தானிய உபபொருள்களை 50 சதவிகிதம் வரை தீவனத்தில் கலக்கலாம். கிழங்குத்திப்பி, பருத்திக்கொட்டை, ஓடு நீக்கப்பட்ட புளியங்கொட்டை ஆகிய வேளாண் கழிவுப் பொருள்களையும் கால்நடைகளின் தீவனத்தில் சேர்க்கலாம்.

கரும்புச்சோகையை பதப்படுத்தி தீவனப்பற்றாக்குறையைப் போக்கலாம். சூரியகாந்தி செடி, விதை நீக்கிய சூரியகாந்தி ஆகியவற்றைச் சிறுதுண்டுகளாக வெட்டி, கால்நடைகளுக்கு உணவாக அளிக்கலாம்.

25 கிலோ எடையுள்ள வளர்ந்த வெள்ளாட்டுக்கு நாளொன்றுக்கு 1 முதல் 1.5 கிலோ மர இலைகளை விவசாயக் கழிவுகளுடன் சேர்த்து அளித்தால் வளர்ச்சி அதிகரிப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. 30 சதவிகிதப் புற்களுடன் 20 சதவிகிதம் மர இலைகளைச் சேர்த்து தீவனமாக அளித்தால் கன்றுகளின் வளர்ச்சி 58 சதவிகிதம் அதிகரிப்பதாகவும், 50 சதவிகிதம் வைக்கோலுடன் 40 சதவிகிதம் சுபாபுல் இலைகளைச் சேர்த்து தீவனமாக அளித்தால் கிடாரிகன்றுகளின் வளர்ச்சி 35 சதவிகிதம் அதிகரிப்பதாகவும் ஆராய்ச்சித் தகவல்கள் கூறுகின்றன.

மாலை அல்லது இரவு நேரங்களில் தீவனமிட்டால் கால்நடைகள் நல்லமுறையில் உண்ணும். கடும்வெயில் நேரத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. விஷச்சத்துள்ள தீவனப்பயிர்களை கால்நடைகளுக்கு தவிர்த்தல் அவசியம். தீவனத் தட்டைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி அளிப்பதால் கழிவுகள் குறையும். மழையின்றி வாடும் இளம் சோளப்பயிரில் மாட்டை மேய்க்கக் கூடாது. ஏனெனில் அவற்றில் உள்ள சயனிக் அமிலம் உடனடியாக இறப்பை ஏற்படுத்தும். முழு தீவனத்தையும் ஒரே நேரத்தில் அளிக்காமல் இரண்டு அல்லது மூன்று தடவைகளாகப் பிரித்து அளித்தல் வேண்டும்.

(கட்டுரையாளர்: கால்நடை உதவி மருத்துவர்)

### இலவச கால்நடை மருத்துவ முகாம்

First Published : 21 Jan 2010 01:33:01 AM IST

மதுராந்தகம்,ஜன.20: செய்யூர் தாலுகா புதுப்பட்டு ஊராட்சியில் இலவச கால்நடை மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஊராட்சிக்குட்பட்ட நெமந்தம் கிராமத்தில் நடந்த முகாமில் செய்யூர் கால்நடை நிலைய மருத்துவர் வி.செல்லதுரை தலைமையிலான மருத்துவக் குழுவினர், 320 கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசியும், 1,500 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம், சினை பரிசோதனை உள்ளிட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டன.

முகாமிற்கு கால்நடை பாரமரிப்பு உதவி இயக்குநர் டாக்டர்.அம்பேத்கர் தலைமை தாங்கினார்.

ஊராட்சித் தலைவர் சரோஜா ராஜகோபால் முன்னிலை வகித்தார்.துணைத் தலைவர் குமார் நன்றி கூறினார்.

### எண்ணெய்வித்து சாகுபடி பயிற்சி

First Published : 21 Jan 2010 01:32:49 AM IST

உத்தரமேரூர், ஜன. 20: எண்ணெய்வித்து பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து உத்தரமேரூர் வட்டம், பென்னலூர் கிராமத்தில் பல்வேறு செயல் விளக்கத்துடன் செவ்வாய்க்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

÷ தொடக்க விழாவுக்கு தலைமை வகித்த காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எஸ்.எம். செல்வபிள்ளை பேசுகையில், ஐசோபாம் எண்ணெய்வித்து சாகுபடி திட்டத்தில் வழங்கப்படும் மானியங்களை விளக்கினார்.

÷ முன்னிலை வகித்துப் பேசிய உத்தரமேரூர் சட்டப்பேரவை உறுப்பினர் க. சுந்தர், இதையொட்டி வேளாண் துறையினர் அமைத்திருந்த கருத்துக் காட்சியை திறந்துவைத்து அரசு நலத் திட்டங்களை எடுத்து கூறினார். பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு இடுபொருள்களை வழங்கினார்.

÷ முன்னதாக, உத்தரமேரூர் வேளாண் உதவி இயக்குநர் வரவேற்றார்.

÷உத்தரமேரூர் வேளாண் அலுவலர்கள் எஸ். சுரேஷ்குமார் உள்ளிட்டோர் பேசினர்.÷உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கு. துரைவேலு, மாவட்ட தொலை தொடர்பு ஆலோசனைக் குழு உறுப்பினர் இரா. நாகன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் எ. எட்டியப்பன், பென்னலூர் ஊராட்சித் தலைவர் பி.கே. சுப்பிரமணியம்,துணை த் தலைவர் கஜபதி உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர்.÷பென்னலூர், அம்மையப்பநல்லூர், அனுமந்தண்டலம், இளநகர், களியாம்பூண்டி  கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

### பயிர்க் காப்பீட்டுத் திட்ட மதிப்பீட்டாய்வு சோதனை அறுவடை: வேளாண் அலுவலர் ஆய்வு

First Published : 21 Jan 2010 05:54:34 AM IST

நாகப்பட்டினம்,  ஜன. 20: தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் தி6ட்ட பயிர் மதிப்பீட்டாய்வு சோதனை அறுவடை நாகை மாவட்டம், சீர்காழி அருகே உள்ள புதுத்துறையில் வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஆர்.வி. கருணாகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக வேளாண் துறை ஆணையர் கோசலராமன் வியாழக்கிழமை நாகை மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், ஆத்மா திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், விதை கிராமத் திட்டம், தென்னை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐசோபாம் திட்டங்களின் செயலாக்கத்தை ஆய்வு செய்கிறார்.   வியாழக்கிழமை காலை குத்தாலம் ஒன்றியம், கொத்தங்குடி கிராமத்தில்  கரும்பு துல்லியப் பண்ணைத் திட்டத்தை ஆய்வு செய்கிறார்.   இதைத் தொடர்ந்து, செம்பனார்கோவில் அரசூரில் வேளாண் துறை சார்பில் நடைபெறும் உழவர் வயல்வெளிப் பள்ளி வயல் தின விழா, விதை கிராமத் திட்டப் பணியாளர்களுக்கு மானிய விதையில் உளுந்து, பயறு விதைகள் வழங்கும் விழா ஆகியவற்றில் வேளாண் துறை ஆணையர் பங்கேற்கிறார். பிற்பகல் சுமார் 3 மணிக்கு சீர்காழி அருகே உள்ள புதுத்துறையில் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும், பயிர் மதிப்பீட்டாய்வுக்கான சோதனை அறுவடையைப் பார்வையிடுகிறார்.

#### பயிர்க் காப்பீடு செய்தும் நிவாரணம் கிடைக்காத அத்தியூத்து விவசாயிகள்!

First Published : 21 Jan 2010 07:20:38 AM IST

ராமநாதபுரம்,ஜன. 20: ராமநாதபுரம் அருகே அத்தியூத்து கிராமத்தில் பயிர்க் காப்பீடு செய்தும் சுமார் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் நிவாரணம் கிடைக்காமல் சிரமப்படுவதாக சித்தார்கோட்டையில் புதன்கிழமை நடைபெற்ற மக்கள் தொடர்புத்திட்ட முகாமில் மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

அத்தியூத்து கிராமத்தின் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும் கிராம பொதுநலச் சபையின் தலைவருமான அப்துல்மாலிக் ஆட்சியரிடம் த.ந.ஹரிஹரனிடம் அளித்த மனு விவரம்:

அத்தியூத்து கிராமத்தில் உருவனேந்தல், சின்னக்கண்மாய் மற்றும் பெரிய கண்மாய் என 3 கண்மாய்கள் உள்ளன. இதில் உருவனேந்தல் கண்மாய்ப் பகுதியில் தேர்போகி மற்றும் அத்தியூத்து கிராமத்தினரும் விவசாயம் செய்து வருகின்றனர்.

மேற்கண்ட 2 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் பயிர்க் காப்பீட்டுக்குரிய கட்டணம் செலுத்தியிருக்கின்றனர். ஆனால் தேர்போகி கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் காப்பீட்டு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. அத்தியூத்து விவசாயிகளுக்கு இதுவரை நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை.

அத்தியூத்து கிராம விவசாயிகள் கடந்த ஆண்டு மட்டும் புல்லங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் சுமார் 2000 ஏக்கருக்கு 300-கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்க்காப்பீடு செய்தனர். ஆனால் இவர்களில் யாருக்கும் எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை.

கடந்த ஆண்டு பெய்த தொடர் மழை காரணமாக அனைத்துப் பயிர்களும் பாதிக்கப்பட்டும் யாருக்கும் நிவாரணம் கிடைக்காத வருத்தத்தில் உள்ளனர். இந்த ஆண்டு எப்படியும் நிவாரணம் கிடைக்கும் என்ற நோக்கத்தில் அத்தியூத்து கிராம மக்கள் புல்லங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ரூ.2 லட்சம் வரை பயிர்க்காப்பீடு செய்துள்ளனர்.

எனவே, கடந்த ஆண்டைப் போல இல்லாமல் இந்த ஆண்டு அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டுக்குரிய நிவாரணம் கிடைக்க வேண்டும் எனவும் அப்துல் மாலிக் தனது கோரிக்கை மனுவில் கேட்டுக்கொண்டுள்ளார்.

**பருவநிலை மõற்றத்தõல் விளைச்சலில் 30 சதவீதம் பõதிப்பு**

First Published : 21 Jan 2010 08:44:55 AM IST
Last Updated :

கேõவை, ஜன.20: பருவநிலை மõற்றத்தõல் வேளõண் விளைச்சலில் 30 சதவீதம் பõதிக்கப்படுகிறது என்று கவிஞர் கவிதõசன் கூறினõர்.

தென்னிந்திய பெõறியியல் உற்பத்தியõளர்கள் சங்கம் (சீமõ) சõர்பில் கேõவை ரேஸ்கேõர்ஸில் உள்ள சங்க அலுவலகத்தில் உழவுக்கும், தெõழிலுக்கு வந்தனம் செய்வேõம் என்னும் தலைப்பில் திங்கள்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் பேசியது:

இந்தியõவில் 70 சதவீத விவசõயிகள் மழையை நம்பித்தõன் விவசõயம் (மõனõவõரி) செய்து வருகின்றனர். இதில் 30 சதவீதம் தரிசு நிலங்களõக உள்ளன. 2020-ல் மக்கள்தெõகை 135 கேõடியõக உயர்ந்துவிடும் என கணக்கிடப்ப ட்டுள்ளது. அப்பேõது உணவுப் பற்றõக்குறை ஏற்பட வõய்ப்புள்ளது.

பருவநிலை மõற்றத்தõல் மனித வõழ்வுக்கு பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டு வருகின்றன. வேளõண் விளைச்சலில் 30 சதவீதம் பõதிக்கப்பட்டு வருகிறது. விவசõயம் பற்றி யõரும் சிந்திப்பதில்லை. குறைந்த கõலத்தில் அதிக விளை ச்சல் தரும் வகையில் புதிய பயிர் ரகங்களை கண்டுபிடிக்க வேண்டும். அதுபேõன்ற பயிர்களõல் மண்வளத்துக்கு ப õதிப்பு ஏற்படõமல் பõர்த்துக்கெõள்ள வேண்டும்.

மின்வெட்டு பிரச்னையõல் தெõழில்துறை அதிகம் பõதிக்கப்படுகிறது. எனவே, மின்உற்பத்தித் திட்டங்களை துரித ப்படுத்த வேண்டும் என்றõர்.

சீமô தலைவர் ஜெயக்குமôர் ரôம்தôஸ், இந்திய பம்ப் உற்பத்தியôளர்கள் சங்க முன்னôள் தலைவர் வி.கிருஷ்ணகுமôர், கேôஇண்டியô தலைவர் ஜி.ரôஜேந்திரன், டேப்மô செயலர் செப்ந்தரரôஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

**புவி வெப்பமயமாதல் விழிப்புணர்வு மனிதச் சங்கிலி**

First Published : 21 Jan 2010 02:10:57 AM IST
Last Updated :

தருமபுரி, ஜன.20: புவி வெப்பமயமாதலை

தடுக்கும் வகையில் பள்ளி குழந்தைகள் பங்கேற்ற விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி தருமபுரி ஆட்சியர் அலுவலகம் முன் புதன்கிழமை நடைபெற்றது.

டிரஸ்ட் ஹெல்ப் என்ற தான்னார்வத் தொண்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் டான் மெட்ரிக்மேல்நிலைப் பள்ளி, பச்சமுத்து மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, வள்ளலார் பள்ளி உள்ளிட்டபள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

புவி வெப்பமயமாதல், மரபுசாரா எரிபொருள் பயன்பாடுகள் உள்ளிட்டவை குறித்த விழிப்புணர்வு தட்டிகளை ஏந்தி மாணவ, மாணவிகள் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்நிறுவனத்தின் அமைப்பாளர் ஏ.ஆன்டனிராஜ், நல்லம்பள்ளி ஒன்றியக் குழுத் தலைவர் தடங்கம் பி.சுப்பிரமணி, பாலக்கோடு ஒன்றியக் குழுத் தலைவர் பி.கே.முருகன், வள்ளலார் பள்ளி முதல்வர் பீட்டர் பிரான்சிஸ், நிறுவனத்தின் இயக்குநர்

ஆர்.சார்லஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வுத் திட்டம்**

First Published : 21 Jan 2010 06:57:49 AM IST

மதுரை, ஜன. 20: அரசு உத்தரவின் பேரில் கூட்டுறவு வங்கிகளில் பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டம் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர் கூட்டுறவு வங்கிகள், கலைக்கப்பட்ட மதுரை நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் வழங்கப்பட்ட பண்ணைசாரா கடன்களுக்கு மட்டும் பொருந்தும்.

கடன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாள் வரை 6 சதம் சாதாரண வட்டி மட்டுமே கணக்கிடப்படும். கூடுதல் வட்டி, அபராத வட்டி, செலவினங்கள் தள்படி செய்யப்படும். இத்திட்டம் 31.1.2010 }ல் முடிவடைகிறது.

எனவே, இந்த வாய்ப்பை ஏற்கெனவே 25 சதம் தொகை செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்தவர்களும், புதிதாக இத்திட்டத்தில் சேர்வோரும் முழுத்தொகையினை ஜனவரி 31}ம் தேதிக்குள் செலுத்தி பயனடையலாம் என, மதுரை மண்டல இணைப் பதிவாளர் கே.வி.எஸ்.குமார் தெரிவித்துள்ளார்.

**வனத்திற்குள் 40 ஆண்டுகளுக்கு மேல் விவசாயம் செய்தால் பட்டா உண்டு : அமைச்சர் செல்வராஜ் பரிந்துரை**
ஜனவரி 21,2010,00:00 IST



திண்டுக்கல் : "வனத்திற்குள், 40 ஆண்டுகளுக்கு மேல் விவசாயம் செய்து வருபவர்களுக்கு, பட்டா வழங்குவது குறித்து, பரிசீலிக்கப்பட்டு வருகிறது; முதல்வர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என, வனத்துறை அமைச்சர் செல்வராஜ் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில், அனுமதியின்றி மரங்கள் வெட்டப்பட்டுள்ளது குறித்து ஆய்வு செய்ய வந்த, வனத்துறை அமைச்சர் செல்வராஜ் கூறியதாவது: சிறுமலையில் 20 ஆயிரம் ஏக்கர், "ரிசர்வ் பாரஸ்ட்'டாக மாற்ற, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில், 13 ஆயிரம் ஏக்கர், சர்வே முடிந்து, மீதமுள்ள 7,000 ஏக்கர் பணி, இரண்டு மாதத்தில் முடியும்.

வனத்தில் வசிப்பவர்கள், 40 ஆண்டுகளுக்கும் மேலாக, விவசாயம் செய்து வருவதாகவும், வனச்சட்டம் வருவதற்கு முன்பே குடியேறிய தங்ளுக்கு, பட்டா வழங்கவும், குடிநீர், தெருவிளக்கு, ரோடு வசதி செய்து தர வேண்டும் என கேட்டனர். இதுகுறித்து, முதல்வரிடம் தெரிவிப்பேன். 40 ஆண்டுகளுக்கு மேல் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க, பரிசீலனை செய்யப்படுகிறது. தேனி மாவட்டம், வாலிப்பாறை, வருஷநாடு பகுதிகள், ஏற்கனவே "ரிசர்வ் பாரஸ்ட்'களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது அந்த மக்களுக்கு எந்த தொந்தரவும் இல்லாத வகையில், இந்த பிரச்னைக்கு தீர்வு காண திட்டமிட்டுள்ளோம். சிறுமலை பிரச்னை, வாலிப்பாறை பிரச்னை வெவ்வேறானவை. இரண்டுக்குமே நல்ல தீர்வு கிடைக்கும்.

சிறுமலையில் பட்டா நிலத்தில், 3,994 மரங்களை அனுமதியின்றி வெட்டி உள்ளனர். இதில் பாதிக்கு மேல், வனத்துறை கைப்பற்றி உள்ளது. பட்டா நிலத்தில் மரம் வெட்டியவர்கள், கோர்ட்டில் பணத்தை கட்டி, மரத்தை எடுத்துக் கொள்ளலாம். இந்த சட்ட சலுகை, அவர்களுக்கு சாதகமாக உள்ளது. எனவே, அனுமதியின்றி மரம் வெட்டுபவர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்க, சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படும். இவ்வாறு செல்வராஜ் கூறினார்.

**மாட்டுத்தீவன உற்பத்தி மையங்கள் மதுரை, மாதவரத்தில் அமைகின்றன**

ஜனவரி 21,2010,01:47



'பால் உற்பத்தியில் நாட்டிலேயே மூன்றாவது இடத்தில் இருக்கும் தமிழகத்திற்கு, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மதுரையிலும், மாதவரத்திலும் மாட்டுத் தீவன உற்பத்தி மையங்களை அமைப்பதற்கு, மத்திய அரசு 70 கோடி ரூபாய் அளிக்க வேண்டும்' என, தமிழக அரசு கோரியுள்ளது.

டில்லியில் நடைபெற்ற பால்வளத்துறை அமைச்சர்களின் மாநாட்டில் தமிழக பால்வளத்துறை அமைச்சர் மதிவாணன் கலந்து கொண்டு பேசியதாவது: பால் உற்பத்தியில், நாட்டிலேயே முதல் இடத்தில் குஜராத் உள்ளது. 70 லட்சம் லிட்டரை ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்கிறது. அடுத்த இடத்தில் உள்ள கர்நாடகம், 39 லட்சம் லிட்டரை உற்பத்தி செய்கிறது. மூன்றாவது இடத்தில் உள்ள தமிழகம், 26 லட்சம் லிட்டர் வரை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள், இந்த உற்பத்தியை 30 லட்சம் லிட்டராக்க திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழக அரசு நிறைய நடவடிக்கைகள் எடுக்க திட்டமிட்டுள்ளது. இருப்பினும் பால் உற்பத்தி தனியார் மயம் ஆக்கப்படமாட்டாது. கூட்டுறவு சங்கங்கள் மூலமே பால் உற்பத்தி அதிகரிக்கப்படும். மூன்று லட்சம் கிலோ திறனுள்ள அதிநவீன மாட்டுத்தீவன உற்பத்தி மையங்களை மாதவரத்திலும், மதுரையிலும் துவங்க, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு, மத்திய அரசு 70 கோடி ரூபாய் அளித்து உதவிட வேண்டும். இரண்டு கோடி ரூபாய் செலவில், செழுமைமிக்க செயற்கை விந்தணு சேமிப்பு மையம், ஊட்டியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

திருவண்ணாமலையில், 60 கோடி ரூபாய் செலவில், பால்பவுடர் தயாரிப்பு மையத்தை துவக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், 20 மில்லியன் டன் பால்பவுடர், நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும். இதற்கு நபார்டு உதவி கோரப்பட்டு, பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகி விட்டன. ஆவின் நிறுவனத்திற்கு, 324 கோடி ரூபாய் வரை நஷ்டம் இருந்து வருகிறது. இதில், 15 கோடி ரூபாய் வரை இந்த ஆண்டு ஈடு செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு நஷ்டத்தில் இயங்கி வந்தாலும், ஆவினில் பணிபுரிவோருக்கு, ஆறாவது சம்பள கமிஷனை தமிழக அரசு அமல்படுத்தியுள்ளது. பால் உற்பத்தியை பெருக்குவதற்கு, 50 ஆயிரம் கறவை மாடுகளை விவசாயிகளுக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு, 22 கோடி ரூபாய் வரை செலவிடப்படும். பால் உற்பத்தியை பெருக்கும் நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, தி.மு.க., ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, பசும்பாலுக்கு 5.50 ரூபாய் வரையிலும், எருமை பாலுக்கு 10 ரூபாய் வரையிலும் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மதிவாணன் பேசினார்.

- நமது டில்லி நிருபர் –

**பால் உற்பத்தி அதிகரிக்க திட்டம்: மத்திய அரசு தகவல்**

ஜனவரி 21,2010,01:46



இன்னும் 10 ஆண்டுகளில் நாட்டின் பால் உற்பத்தி தேவை என்பது, 16.6 கோடி டன் வரை இருக்கும். அதனால், ஆண்டொன்றுக்கு 50 லட்சம் டன் வரை உயர்த்த வேண்டும். இதற்கான விசேஷ திட்டம் நிறைவேற்றப்படும் என்று, மத்திய அமைச்சர் சரத்பவார் கூறினார். அனைத்து மாநில பால்வளத்துறை அமைச்சர்கள் மாநாடு டில்லியில் நடந்தது. இதில், மத்திய அமைச்சர் சரத்பவார் பேசியதாவது: நாட்டின் பால் உற்பத்தி என்பது சமாளிக்கக் கூடிய வகையில் இருந்தாலும், அடுத்த 10 ஆண்டுகளில் 16.6 கோடி டன் வரை உற்பத்தி செய்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். திட்டமிட்ட இலக்கை அடைய வேண்டுமெனில், ஒவ்வொரு ஆண்டும் 50 லட்சம் டன் வரை அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, 17 ஆயிரத்து 371 கோடி ரூபாய் செலவில் தேசிய பால் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கியும் உதவி செய்யும் என்பதால், இது குறித்து மாநில அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பால் உற்பத்தியில் ஒரு சில மாநிலங்கள் மட்டுமே அதிக அக்கறையுடன் செயல்படுகின்றன. ராஷ்டிரிய கிருஷி விகாஸ் என்ற திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் மத்திய அரசின் நிதியை, பால் உற்பத்திக்கென செலவழிக்காமல், பல மாநிலங்கள் முக்கியத்துவம் அளிக்காமல் இருந்து வருகின்றன. இது மாற வேண்டும். இவ்வாறு சரத் பவார் பேசினார்.

- நமது டில்லி நிருபர் –

**பி.ஏ.பி., திட்டத்திலுள்ள அணைகளிலிருந்து உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்ககூடாது : பொள்ளாச்சி விவசாயிகள் ஆவேசம்**

பொள்ளாச்சி : பி.ஏ.பி., திட்டத்திற்கு உட்பட்ட அணைகளில் இருந்து உப்பாறு அணைக்கு சட்டவிதிமுறைகளுக்கு முரணாக தண்ணீர் திறந்து விட்டால், திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராடுவோம் என விவசாயிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டம் நடந்தது. ஆர்.டி.ஓ., அன்பழகன் தலைமை வகித்தார், தாசில்தார் வேணுகோபால் வரவேற்றார். துணை தாசில்தார்கள் சுமகுமாரி, அக்பர் அலி, சரவணன், பி.ஏ.பி., உதவி செயற்பொறியாளர் சிவசாமி, வேளாண்மை உதவி இயக்குனர்கள் செல்வராஜ், மோகனசுந்தரம் உட்பட பலர் பங்கேற்றனர். பி.ஏ.பி., பாலாறு படுகை திட்டக்குழு தலைவர் பரமசிவம், பாசன

சங்க தலைவர் பெருய கருப்புசாமி, தி.மு.க., விவசாய அணி தலைவர் ஆறுச்சாமி, பா.ஜ., விவசாய அணி தலைவர் பாண்டீஸ்வரன், தமிழக விவசாயிகள் சங்க தலைவர் முத்துசாமி உள்பட பலர் பேசினர்.
விவசாயிகள் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

பி.ஏ.பி., முதல் மண்டல பாசனத்திற்கு ஜன., 22ம் தேதி முதல் தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், திருப்பூர் மாவட்ட கலெக்டர் தண்ணீர் திறப்புக்கு இன்னும் பரிந்துரை செய்யாததால் அரசாணை வெளியிடப்படாமல் உள்ளது.

பி.ஏ.பி., திட்டத்திற்கும் உப்பாறு அணைக்கும் எந்த தொடர்பும் இல்லை. பி.ஏ.பி., திட்டத்தில் திருப்திகரமாக தண்ணீர் இருக்கும் நிலையில் அணைகளுக்கு அதிகப்படியான தண்ணீர் வந்தால் மட்டுமே உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்கலாம் என அரசு உத்தரவில் ஏற்கனவே தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது பி.ஏ.பி., அணைகளுக்கு மூன்று டி.எம்.சி., தண்ணீர் எதிர்பார்த்து காத்திருக்கும் நிறையில் உப்பாறு அணைக்கு தண்ணீர் திறக்க முயற்சிப்பது சட்டவிரோதமானது. நான்கு லட்சம் ஏக்கரில் பாசனம் செய்யும் பாசன விவசாயிகளை பாதிக்கும்.

உப்பாறு அணைக்கு தண்ணீர் திறக்கும் முயற்சியை கைவிடாவிட்டாலும், முதல் மண்டல பாசனத்திற்கு திட்டமிட்டபடி தண்ணீர் திறக்காவிட்டாலும் ஜன., 22ம் தேதி பி.ஏ.பி., விவசாயிகள் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் குடும்பத்துடன் முற்றுகை போராட்டம் நடத்துவோம். இதுபற்றி திருப்பூர் கலெக்டரிடமும் நேரடியாக தெரிவித்து உள்ளோம்.

பொள்ளாச்சி அருகே கொல்லபட்டி காளியாபுரம் கிராமம் வறட்சியான பகுதியாகும். அங்கு, ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து "மினரல் வாட்டர்' தொழிற்சாலை அமைக்க முயற்சி நடக்கிறது. அந்த தொழிற்சாலை வந்தால், குடிநீர் ஆதாரங்களும், விவசாய நீர் ஆதாரமும் பாதிக்கும்.

திப்பம்பட்டி- ஏரிப்பட்டி ரோட்டில் தேங்காய் தொட்டிகளை எரியூட்டுவதால் புகை மண்டலம் ஏற்பட்டு சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. ஆழியாறில் மட்டும் தென்னை நாற்று பண்ணை உள்ளதால் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப கிடைப்பதில்லை. பொள்ளாச்சி அரசு தென்னை நாற்றுப்பண்ணைக்கு கூடுதல் மையங்கள் அமைக்க வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

அதிகாரிகள் பேசும்போது: உப்பாறு அணைக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு இதுவரை எந்த உத்தரவும் வரவில்லை. பி.ஏ.பி., முதல் மண்டல பாசனத்திற்கு திட்டமிட்டபடி ஜன., 22ம் தேதி தண்ணீர் திறக்கப்படும். பொள்ளாச்சி அருகே "மினரல் வாட்டர்' தொழிற்சாலை அமைவதாக கூறப்படும் இடத்தில் தாசில்தார் ஆய்வு செய்துள்ளார். விவசாயிகளை பாதிக்கும் வகையில் தொழிற்சாலை அமைய அனுமதி வழங்கப்படாது என்றனர்.

**திட்டக்குடி மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச்சோளம் வரத்து அதிகரிப்பு**

திட்டக்குடி: கடலூர் மாவட்டம் திட்டக்குடி மார்க்கெட் கமிட்டியை சுற்றியுள்ள 80க்கும் மேற்பட்ட கிராமங்களைச்சேர்ந்த விவசாயிகள் தங்களது விளை பொருட்களை மறைமுக ஏலம் மூலம் விற்பனை செய்து வருகின்றனர். காலம் தவறிய மழை, பருவ நிலை மாற்றங்களால் இப்பகுதி விவசாயிகள் பணப்பயிரான வேர்கடலை, எள், மல்லி போன்றவற்றை பயிரிடுவதை தவிர்த்தனர். மாறாக மானாவாரி பயிர்களான மக்காச் சோளம், சூரியகாந்தி பயிரிடுவதில் ஆர்வம் கட்ட துவங்கியுள்ளனர். இதற்கு காரணம் பணப்பயிர்கள் 120 நாட்கள் வளரக்கூடியவை. ஆனால் மக்காசோளம் 100 நாளில் அறுவடை செய்ய முடிகிறது. ஏக்கருக்கு 30 மூட்டை வரை

மகசூல் கிடைப்பதால், விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிடுவதை விரும்புகின்றனர். இதன் காரணமாக எப்போதும் வேர்கடலை, எள் மற்றும் மல்லி வரத்தே அதிகமாக இருக்கும் திட்டக் குடி மார்க்கெட் கமிட்டிக்கு இந்தாண்டு வழக்கத் திற்கு மாறாக மக்காச்சோளம் வரத்து அதிகரித்துள் ளது. நேற்று காலை மக்காச்சோளம் 60 மூட்டைகளும், வேர்கடலை 11 மூட்டைகளும், எள் ஒரு மூட் டையும் விற்பனைக்கு வந்தன. இதில் 80 கிலோ மூட்டை வேர்கடலை 3, 234 ரூபாய்க்கும், 80 கிலோ  எள் 2,429க்கும், 40 கிலோ மூட்டை மல்லி 1,589க்கு விலை போனது. 100 கிலோ கொண்ட மக்காச்சோளம் 854 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த ஒரு ஆண்டாகவே திட்டக்குடி மார்க்கெட் கமிட்டி இலக்கை அடைய  மக்காச்சோளம் பயிரே உறுதுணையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு மானியத்தில் அறுவடை இயந்திரங்கள்**

கடலூர்: விவசாயிகளுக்கு மானிய விலையில் பல்வேறு இயந்திரங்களை கலெக்டர் வழங்கினார். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் இயந்திரமயமாக்குதலின் கீழ் கடலூர் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறையின் மூலம் மொத்தம் ஆறு பயனாளிகளுக்கு மொத்தம் 19.91 லட்சம் மதிப் பில் பல்வேறு இயந்திரங்கள் 5.85 லட்சம் ரூபாய் அரசு மான்யத்தில் கலெக்டர் நடராஜன்(பொறுப்பு) நேற்று வழங்கினார். கடலூரில் நேற்று காலை நடந்த நிகழ்ச்சியில் நெல் அறுவடை இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், நடவு நடும் இயந்திரம், சுழல் கலப்பை மூன்று இயந்திரங்களும்  வழங்கப்பட்டன. நெல் அறுவடை இயந்திம் நடப்பு ஆண்டில் மாநிலத்திலேயே முதன் முறையாக கடலூர் மாவட்டத்தில்  மானியத்துடன் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் வேளாண் செயற்பொறியாளர் அரியபூபதி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் மணி, உதவி செயற் பொறியாளர் பாண்டியன், உதவி பொறியாளர் சேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண் துறை மூலம் பருத்தி ஏல விற்பனை**

அரூர்: அரூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் பருத்தி ஏல விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாரம் தோறும் திங்கட் கிழமை அரூரிலும், புதன் கிழமை தொங்கனூரிலும், வெள்ளிக்கிழமை பில்பருத்தியிலும் பருத்தி ஏல விற்பனை நடந்து வருகிறது. இந்த ஏல விற்பனையில் சேலம், பெருந்துரை, அவினாசி, திருப்பூர் மற்றும் கோவை உள்ளிட்ட பகுதியில் இருந்து வியாபாரிகள் வந்து பருத்தியினை கொள்முதல் செய்கின்றனர்.
கடந்த வாரம் நடந்த ஏலத்தில் எல்.ஆர்.ஏ., எம்.சி.யு.,5, ஆர்.சி.ஹெச்., வகை பருத்திகள் குவிண்டாலுக்கு 2,900 முதல் 3,300 ரூபாய் வரையிலும், டி.சி.ஹெச்., மற்றுமுனூ வரலட்சுமி பருத்தி வகைகள் குவிண்டாலுக்கு 4,000 முதல் 4,400 ரையில் ஏலம் போனது. "தர்மபுரி மாவட்டத்தில் பருத்தி பயிர் செய்துள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி ஏல விற்பனையில் பருத்தி கொண்டு வந்து விற்பனை செய்து கொள்ளுமாறு' அரூர் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தனி அலுவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**தக்காளி விலை சரிவு விவசாயிகள் கலக்கம்**

தர்மபுரி: கடந்த சில வாரங்களாக விலை உயர்ந்திருந்த தக்காளி மீண்டும் விலை சரிவடைந்துள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாலக்கோடு, தர்மபுரி ஆகிய பகுதியில் அதிக அளவில் தக்காளி பயிர் செய்யப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் தக்காளி சென்னை மற்றும் தென் மாவட்டங்களுக்கு அதிக அளவில் விற்பனைக்கு செல்கிறது. தக்காளி விற்பனையை மையமாக வைத்து பென்னாகரம் மற்றும் பாலக்கோட்டில் தக்காளி விற்பனை சந்தைகள் உள்ளன. இங்கு விற்பனைக்கு வரும் தக்காளி தமிழகத்தின் பல பகுதிக்கு விற்பனைக்கு செல்கிறது. ஆண்டு முழுவதும் விற்பனைக்கு வரும் தக்காளி உற்பத்தியை பொறுத்து விலை ஏற்ற, இறக்கத்தில் இருக்கும். கடந்த சில வாரங்களாக தக்காளி விலை உயர்ந்திருந்தது. பொங்கல் பண்டிகையொட்டி கிலோ 15 முதல் 20 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. கடந்த இரு

நாட்களாக தக்காளி விலை மீண்டும் சரிவடைந்துள்ளது. கிலோ 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால், தக்காளி விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தற்போது, "உற்பத்தி அதிகம் இருப்பதால், வரும் நாட்களிலும் தக்காளி விலை ஏற்ற இறக்கத்தில் இருக்கும்' என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் சமூக பாதுகாப்பு திட்டம் விண்ணப்பிக்க கலெக்டர்அழைப்பு**

கரூர்: விவசாயிகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உறுப்பினர் அடையாளஅட்டை பெறாதவர்கள் நேற்று முதல் விண்ணப்பிக்க கலெக்டர்உமாமகேஸ்வரி அறிவித்துள்ளார்.

அறிக்கையில் உள்ளதாவது: தமிழ்நாடு விவசாய தொழிலாளர், விவசாயிகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உறுப்பினர் அடையாள அட்டை பெறாத தகுதியான நபர்களுக்கும், 2006க்கு பிறகு புதிய ரேஷன் கார்டு பெற்றவர்களுள் தகுதியானவர்களும் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குவதற்காக கரூர் மாவட்டத்தில் அனைத்து வி.ஏ.ஓ., அலுவலகத்தில் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்படுகிறது.

விண்ணப்பிக்கும் நபர் ரேஷன் கார்டு வைத்திருக்க வேண்டும். 2.5 ஏக்கர் நஞ்சை நிலம், ஐந்து ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருக்க வேண்டும். விவசாய தொழில் செய்பவராக இருக்க வேண்டும். 18 முதல் 65 வயதுக்குள் இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட குத்தகைதாரராக இருக்கலாம். முகாம் அன்று உரிய சான்றுகளுடன் விண்ணப்பம் செய்து இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

மேலும் சிறப்பு முகாமில் ஆதரவற்ற முதியோர், விதவை, உடல் ஊனமுற்றோருக்கும் மாத ஓய்வூதியம் பெற விண்ணப்பிக்கலாம். முதியோர் உதவிதொகை பெற 65 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். ஆதரவற்று, வீடு, நிலம் இல்லாதவராகவும் இருக்க வேண்டும். வயதுக்கான சான்று அரசு டாக்டரிடம் பெற்று இணைக்க வேண்டும். குறிப்பிட்ட படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பப்பட்டியலில் பெயர் இருக்க வேண்டும். விதவை உதவித்தொகைக்கு 40 முதல் 64 வயதுக்குள் இருக்க வேண்டும். உடல் ஊனமுற்றோர் உதவிதொகை பெற விரும்புவோர் 18 முதல் 64 வயதுக்குள் இருக்க வேண்டும். கை, கால் ஊனம், கண்பார்வை, மனவளர்ச்சி குன்றியவர் ஊனத்தின் தன்மை 80 சதவீதமாக இருக்க வேண்டும்.

தகுதியுடையோர் மனு மற்றும் தக்க ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வி.ஏ.ஓ., அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத்திட்டம், தேசிய விதவை ஓய்வூதிய திட்டம், தேசிய உடல் ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் போன்றவற்றில் பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**பட்டு தொழில் நுட்ப விழிப்புணர்வு முகாம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியை அடுத்த கத்தேரியில் பட்டு வளர்ச்சி துறை சார்பில் தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தில் கீழ் பட்டு வளர்ப்பு குறித்த தொழில் நுட்ப விழிப்புணர்வு முகாம் நடந்தது. மண்டல இணை இயக்குனர் பத்மநாபன் தலைமை வகித்தார். உதவி ஆய்வாளர் மதிவாணன் வரவேற்றார். வெண்பட்டு புழு வளர்ப்பில் பராமரிக்க வேண்டிய சீதோஷ்ண நிலை மற்றும் கிருமி நாசினிகள் பயன்பாடு குறித்து மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி மாசிலாமணி, மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் விளக்கினர். நலத்திட்ட உதவிகள் குறித்து உதவி இயக்குனர் கோலப்பாபிள்ளை பேசினார். களப்பணி அலுவலர்கள் பஷீர், சிவானந்தராவ், திப்புராஜ், முத்துசாமி, வெங்கடராமன் மற்றும் மல்பரி விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இளநிலை ஆய்வாளர் அன்பரசு நன்றி கூறினார்.

**சென்ட்ரல் மார்க்கெட்டை இடம் மாற்றுவதில் மீண்டும் குழப்பம் : வியாபாரிகளிடம் 'வசூல் வேட்டை' கனஜோர்**

மதுரை : மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டை இடம் மாற்றுவதில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. டெபாசிட், வாடகை தொகைக்கு வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மதுரை நகரின் அழகைக் கெடுத்து, சுகாதார கேட்டை ஏற்படுத்தி, போக்குவரத்துக்கும் நெருக்கடியைத் தரும் சென்ட்ரல் மார்க்கெட்டை இடம் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்தது. ஒரு வழியாக

இப்பிரச்னையை தீர்க்கும் முகமாக, மாட்டுத்தாவணிக்கு சென்ட்ரல் மார்க்கெட், இடம் மாற்றப்பட உள்ளது. நிரந்தர கடைகள் கட்டப்படுவதற்கு முன், தற்காலிக கடைகள் கட்டப்படுகின்றன. தற்போது, சென்ட்ரல் மார்க்கெட்டில் உள்ள கடைகளின் ஏல காலம், வரும் ஏப்ரல் 1ம் தேதியுடன் முடிகிறது. அதன் பிறகு, சென்ட்ரல் மார்க்கெட்டை, மாட்டுத்தாவணி தற்காலிக கடைகளுக்கு மாற்ற மாநகராட்சி முடிவு செய்துள்ளது. இப்போது சென்ட்ரல் மார்க்கெட்டில் உள்ள கடைகளுக்கு, அளவைப் பொறுத்து, மாதம் 200 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை வாடகை வசூலிக்கப்படுகிறது. புதிய இடத்திற்கு டெபாசிட் மற்றும் மாத வாடகை தொகையை மாநகராட்சி மாற்றி அமைத்துள்ளது. இதன்படி, 13.6க்கு 13.6 அளவுள்ள கடைகளுக்கு, வாடகையாக 5 ஆயிரம் ரூபாய்; டெபாசிட் ஆக 4 லட்சம் ரூபாய், 8க்கு 8 அளவுள்ள கடைகளுக்கு வாடகை 4 ஆயிரம் ரூபாய்; டெபாசிட் 3 லட்சம் ரூபாய்; 8க்கு 8 தரை கடைகளுக்கு வாடகை 2 ஆயிரம் ரூபாய்; டெபாசிட் 2 லட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த வாடகை அதிகம் இருப்பதாக வியாபாரிகள் புகார் கூறத் துவங்கி உள்ளனர். சென்ட்ரல் மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் நலச்சங்க தலைவர் பி.எஸ்.முருகன் கூறுகையில், ""நாங்கள் மாறப் போவது, தற்காலிக கடைகளுக்கு தான். இதை "ஷிப்டிங்' என்ற முறையில் தான் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு இப்போது வாங்கும் வாடகையைத் தான் வசூலிக்க வேண்டும். நிரந்தர மார்க்கெட்டுக்கு மாறும்போது வேணடுமானால் வாடகையை மாற்றி அமைக்கலாம். அதை விடுத்து, அதிக டெபாசிட் மற்றும் வாடகையை மாநகராட்சி நிர்ணயித்துள்ளது. இவ்வளவு வாடகை எங்களால் தர முடியாது. இதை மாநகராட்சி மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால், இடம் மாறுவது பற்றி நாங்கள் பரிசீலிக்க வேண்டி வரும்'' என்றார். வியாபாரிகளின் இந்த திடீர் முடிவால், சென்ட்ரல் மார்க்கெட்டை இடம் மாற்றுவதில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதற்கு எப்போது தான் விடிவு என மதுரை மக்கள் மீண்டும் ஏங்கத் துவங்கி உள்ளனர். வியாபாரிகளிடம் வசூல்: தற்போது சென்ட்ரல் மார்க்கெட்டில் கடை வைத்துள்ள அனைவருக்குமே கடை ஒதுக்கப்படும் என, ஏற்கனவே மாநகராட்சி உறுதி கூறியுள்ளது. இந்நிலையில் சிலர், "திடீர்' வியாபாரிகள் சங்கங்களைத் துவங்கி, அதன் பெயரில் புதிய இடத்தில் நிறைய கடைகளை கைப்பற்ற திட்டமிட்டுள்ளனர். அங்கு கடைகளை பெற்றுத் தருவதாகக் கூறி, வசூலிலும் இறங்கி உள்ளனர். இதற்கு இடம் தராமல் மாநகராட்சி அதிகாரிகள், விழிப்புடன் செயல்பட்டு, பயனாளிகள் அனைவருக்கும் கடை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**தென்னையில் குரும்பை உதிர்வதை தடுக்க செயல்விளக்கம்**

நீடாமங்கலம்: தென்னையில் குரும்பை உதிர்வதையும், ஒல்லிக்காய்கள் உற்பத்தியாவதையும் தடுப்பது குறித்து நீடாமங்கலம் அருகே நடுப்படுகையில் செயல்விளக்கம் நடந்தது.

நீடாமங்கலம் அருகே நடுப்படுகை முன்னோடி விவசாயி ஆறுமுகம் தென்னைந் தோப்பில் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் செங்குட்டுவன், திட்டஉதவியாளர் ரேகா ஆகியோர் வேர் மூலம் தென்னைக்கு டானிக் செலுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.பின்னர் அறிவியல் நிலையத் தலைவர் செங்குட்டுவன் பேசியதாவது.இந்த தென்னை டானிக்கில் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், மக்னீசியம், இரும்பு, துத்தநாகம், தாமிரம், மாங்கனீஸ்,போரான் மற்றும் மலிப்டினம் ஆகிய ஊட்டச் சத்துக்கள் சரியான விகிதத்தில் கலந்து வளர்ச்சி ஊக்கிகளான ஆக்ஸிஜன், சாலிசிலிக் அமிலம் மற்றும் அஸ்கார்மிக் அமிலம் சேர்த்து தயாரிக்கப்படுகிறது. போரான் போன்ற நுண்ணூட்டங்களும் ஆக்ஸிஜன் போன்ற வளர்ச்சி ஊக்கிகளும் டானிக்கில் உள்ளதால் குரும்பைகள் உதிர்வதும், ஒல்லிக்காய் ஏற்படுவதும் வெகுவாகக் குறைகிறது.காய்களின் எண்ணிக்கையும், பருமனும் உயர்ந்து நல்ல மகசூல் கிடைக்கும்.தென்னைடானிக் தேவைப்படுபவர்கள் வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தை அணுகிப் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

**இயற்கை உரம் மூலம் கீரை உற்பத்தி கணிசமான லாபம் ஈட்டும் விவசாயி**

நாமக்கல்: நாமக்கல் அருகே விவசாயி ஒருவர் இயற்கை உரங்களை பயன்படுத்தி கீரை வகை பயிர்களை நடவு செய்து கணிசமான லாபம் ஈட்டி வருவது, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் வகையில் அமைந்துள்ளது. பருவ கால சூழல் மாற்றத்தால் விவசாயத்துக்கு முக்கிய ஆதாரமாக விளங்கி வரும் நீர் நிலைகள் வறண்டு வானம் பார்த்த பூமியாக காட்சியளிக்கிறது. அதன்காரணமாக விவசாயத் தொழிலும் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகிறது. விவசாயத்தை நம்பி பிழைப்பு நடத்தி வந்த பலர், அதை கை விடுத்து மாற்றுத் தொழிலுக்கு செல்லத் துவங்கியுள்ளனர்.

பல்வேறு பிரச்னைகள் விவசாயத்தில் நிலவி வந்தபோதிலும், அத்தடைகளை சாதகமாக்கிக் கொண்டு பயிர்களை நடவு செய்து லாபம் ஈட்டும் விவசாயிகளும் உள்ளனர். அந்த வகையில் நாமக்கல் அருகே உள்ள அகரம் பஞ்சாயத்தை சேர்ந்த விவசாயி சபாபதி, தனது விளைநிலத்தில் குறிப்பிட்ட பகுதியை கீரை வகைகள், காய்கறி போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தி வருகிறார். அவ்வாறு அவர் உற்பத்தி செய்யும் சிறுகீரை, அரைக்கீரை, சிவப்பு இலைக்கீரை, மிளகு தக்காளி கீரை உள்ளிட்டவற்றை அருகே கிராமப்புறங்களில் கூடும் வாரச்சந்தைகளுக்கு நாள்தோறும் விற்பனைக்கு கொண்டு செல்கிறார்.

அதன்மூலம் கணிசமான லாபமும் அவர் ஈட்டி வருகிறார். செயற்கை உரம் எதுவும் பயன்படுத்தாமல், இயற்கை உரம் மட்டுமே பயன்படுத்தி அவர் கீரைகளை உற்பத்தி செய்கிறார். அதனால் சுற்றுவட்டார கிராமப்புறங்களைச் சேர்ந்த மக்கள், அவரிடம் நேரடியாக வந்து கீரைகளை வாங்கிச் செல்கின்றனர். விவசாயி சபாபதி கூறுகையில், ""எனது விவசாய நிலத்தின் ஒரு பகுதியில் அனைத்து வகையான கீரைகளையும் உற்பத்தி செய்து வருகிறேன். காய்கறியும் உற்பத்தி செய்யப்படுகிறது. கீரை உற்பத்திக்கு மற்ற பயிர்களைப் போல் அதிகளவில் தண்ணீர் தேவையில்லை. சிறுகீரை, அரைக்கீரை, மிளகு தக்காளி போன்ற கீரை வகைகள் 15 முதல் 22 நாட்களுக்குள் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராகிவிடும். அவற்றை மொத்த விலைக்கு விற்பனை செய்வதில்லை. மொத்த விலையில் விற்பனை செய்தால் குறைவான லாபம் மட்டுமே கிடைக்கும். எனவே உற்பத்தி செய்யும் கீரைகளை அருகே கூடும் வாரச்சந்தைகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்கிறேன். ஒரு கட்டு கீரை நான்கு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையிலான விலையில் விற்கிறேன். குறைந்த நாள் பயிர் என்பதால் செயற்கையான உரங்களை கீரைகளுக்கு அடிப்பதில்லை. மாட்டுச்சாண உரம் மட்டுமே பயன்படுத்துகிறேன். அதையறிந்த கிராம மக்கள் நேரடியாக வீட்டு வந்து கீரை வாங்கிச்செல்வர். அதன் மூலம் வீட்டில் இருந்தபடியே நாளொன்றுக்கு 200 ரூபாய் கீரைகளை விற்பனை செய்வேன். அதன் காரணமாக கிராமத்தில் என்னை கீரைக்காரர் எனவும் அழைக்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**கோடை சீசனுக்கு தயாராகிறது குன்னூர் சிம்ஸ் பூங்கா**

குன்னூர் : குன்னூர் சிம்ஸ்பூங்கா, கோடை சீசனுக்கு தயாராகி வருகிறது; வெளிநாட்டு செடிகள் உட்பட 90 ஆயிரம் மலர் செடிகள் பூங்காவை அலங்கரிக்க உள்ளன.
கடந்த 1874ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பழமை வாய்ந்த குன்னூர் சிம்ஸ்பூங்கா முற்றிலும் இயற்கை தன்மை கொண்டது. பூங்காவில் 1,200க்கும் மேற்பட்ட அரிய வகை மர வகைகள் உள்ளன. கற்பூர வகை மரங்களில் மட்டும் 27 வகைகள் உள்ளன. கடந்த 1869ல் நடப்பட்ட "யுஜிநாய்டஸ்' என்ற அரிய வகை கற்பூர மரம் தான் மிகப்பழமையானது.

கடந்த 1870க்கு பிறகு பல வகை மர வகைகள் பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ளன. 104 ஆண்டு பழமை வாய்ந்த யானைக்கால் மரம், அரிய வகை ருத்ராட்சை மரம், காகித மரம், டர்பன்டைன் மரம், ஜெகரன்டா, கெமேலியா, அகேசியா, மரதாகை போன்ற பல வகை பழமை வாய்ந்த மரங்கள் பூங்காவை அலங்கரிக்கின்றன. சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க படகு இல்லம், சிறுவர் பூங்கா உள்ளன. பூங்காவின் இடையிடையே அமைக் கப்பட்டுள்ள செயற்கை பூங்காவில் அழகிய மலர்களின் அணிவகுப்பையும் காண முடியும்.

வரும் ஏப்ரல், மே மாதங்களில் நீலகிரியில் களைகட்டும் கோடை சீசனுக்கு, பூங்காவை தயார்படுத்தும் பணி நடந்து வருகிறது. வெளிநாட்டு மலர்ச் செடிகளான டயான்தஸ், சின்யா டபுள் உட்பட குள்ளரக டேலியா, பிரென்சு மேரி கோல்டு, ஆஸ்டர், லூபின் என மொத்தம் 90 ஆயிரம் மலர்ச் செடிகள் பூங்காவில் நடவு செய்யப்பட உள் ளன. பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராமகிருஷ்ணன் கூறியதாவது: கடந்தாண்டு 80 ஆயிரம் மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட்டன; இந்தாண்டு ஒரு லட்ச ரூபாய் செலவில் 90 ஆயிரம் மலர்ச் செடிகள் நடவு செய்யப்படவுள்ளன. முதல் முறையாக 25 வகை ஆர்குட் மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட உள்ளன. பூங்காவில் உள்ள புல் தரைகளுக்கு இடையே பல வடிவங்களில் மலர்ச் செடிகளை நடவு செய்யவும், மரங்களை சுற்றி மலர்ச் செடிகளை நடவு செய்யவும் திட்டமிட்டுள்ளோம். இந்தாண்டு சுற்றுலாப் பயணிகளை கவர கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன, என்றார்.

**விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்ய ஆலோசனை**

புதுக்கோட்டை:புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்ய உழவர் பயிற்சி நிலைய மேலாண்மை உதவி இயக்குநர் சதானந்தம் அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: உளுந்து பயிரில் அதிக மகசூல் கிடைக்க வழிமுறைகளை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். சரியான ரகங்களை சரியான பருவத்தில் தேர்வு செய்ய வேண்டும்.

இந்த பட்டத்திற்கு ஏற்ற ரகங்களாக வம்பன் -2, வம்பன்-3, டி-9 உள்ளது. சான்று பெற்ற விதைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 8 கிலோ விதைகள் பயன்படுத்த வேண்டும். டிரைக்கோடெர்மா விரிடி பவுடர் மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
விதை நேர்த்தி செய்த விதைப்பு மூலம் பரவும் நோய்களான வேர் அழுகல் வராமல் தடுக்கப்படும்.தலா ஒரு பாக்கெட் ரைசோபியம் (பயறு) மற்றும் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை 200மில்லி ஆறிய அரிசி கஞ்சியில் கலக்க வேண்டும். இதனுடன் ஒரு ஏக்கருக்கு தேவையான 8 கிலோ உளுந்து விதைகளை கலந்து நன்கு கலந்த பின்னர் நிழலில் உலர வைக்க வேண்டும்.

வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியும் இருக்க வேண்டும். பயிர் எண்ணிக்கையினை சரியாக பராமரித்தால் தான் நல்ல மகசூல் பெற முடியும். ஒரு சைக்கிள் டயரை வைத்து பார்க்கும் போது11 செடிகள் இருக்க வேண்டும்.இதற்கு குறைவாக இருந்தால் எதிர்பார்த்த மகசூல் கிடைக்காது. ஏக்கருக்கு அடியுரம் மற்றும் தொழு உரம் 5 டன் இட வேண்டும். ரசாயன உரங்கள் பொது பரிந்துரையின் படி இறவை பயிருக்கு (ஏக்கருக்கு) யூரியா 22 கிலோ, சூப்பர்பாஸ்பேட் 125 கிலோ மற்றும் பொட்டாஷ் 16 கிலோ உரம் இடம் இட வேண்டும்.
முதல் களைவிதைத்த 15 வது நாளிலும் இரண்டாவது களைவிதைத்து30 வது நாளிலும் எடுக்க வேண்டும். பூக்கும் சமயம் இலைவழியாக 2 சதவிகிதம், டி.ஏ.பி. உரத்தினை அதாவது ஒரு ஏக்கருக்கு 4கிலோ டி.ஏ.பி உரத்தினை 20 லிட்டர் நீரில் கலந்து இரவு முழுவதும் வைத்திட வேண்டும். பின்னர் இக்கரைசலை வடிகட்டி தண்ணீர் கலந்து 200 லிட்டர் நீர் கரைசலாக்கி மாலை வேளைகளில் நிலத்தில் ஈரம் இருக்கும் போது தெளிக்க வேண்டும்.
இதே போன்று முதல் தெளிப்புக்கு 15 நாட்கள் கழித்து மற்றொரு முறை தெளிக்க வேண்டும். இதனால் பூக்கும் திறன் அதிகமாகி காய்கள் அதிகமாக பிடிக்க வாய்ப்புகள் உள்ளதால் மகசூல் அதிகரிக்கிறது. எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இந்த தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து அதிக மகசூல் பெறலாம்.இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மரவள்ளிக்கு சொட்டு நீர்ப்பாசனம் சாதித்த விவசாயிகளுக்கு பாராட்டு**

ஆத்தூர்: ஆத்தூர் அருகே துல்லிய பண்ணை திட்டத்தில் மரவள்ளி பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்து சாதனை படைத்த விவசாயிகளை நேரில் சந்தித்து மாவட்ட கலெக்டர் பாராட்டு தெரிவித்தார். சேலம் மாவட்டம் ஆத்தூர், தலைவாசல் சுற்றுவட்டார விவசாயிகள், மரவள்ளியை பிரதான பயிராக செய்து வருகின்றனர்.

இப்பகுதியில் 400க்கும் மேற்பட்ட மரவள்ளி கிழங்கு அரவை செய்யும் சேகோ ஃபேக்டரிகள் உள்ளன. போதிய பருவ மழை பெய்யாததால் சொட்டு நீர் பாசன முறையில் சாகுபடி செய்ய வேளாண் துறை மூலம் அறிவுறுத்தப் பட்டது. அதன்பேரில் ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், தலைவாசல், கெங்கவல்லி போன்ற பகுதிகளில் துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்பட்டது. விவசாயிகள் பலர், கரும்பு, வாழை, மஞ்சள், கோலியாஸ், மரவள்ளி, தென்னை, பாக்கு போன்ற பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ளனர். பெத்தநாயக்கன்பாளையம் யூனியனுக்குட்பட்ட ஒட்டப்பட்டி கிராமத்தை சேர்ந்த தர்மலிங்கம், முருகேசன் உள்ளிட்ட விவசாயிகள் மரவள்ளி கிழங்கு பயிர்களுக்கு சொட்டு நீர் பாசன முறை பயன்படுத்தினர். அவ்வாறு பாசனம் பெற்ற மரவள்ளி செடிகள் ஊட்டமாக பெரியளவில் வளர்ந்திருப்பதோடு, மரவள்ளி கிழங்குகளும் "மெகா சைஸ்' அளவில் உற்பத்தியாகியுள்ளது. சொட்டு நீர் பாசன முறையில் அதிகளவில் உற்பத்தி கிடைத்திருப்பது விவசாயிகளை பெரிதும் மகிழ்ச்சியடைய செய்துள்ளது. மரவள்ளியில் சொட்டு நீர் பாசன முறை பயன்படுத்தி சாகுபடியில் சாதனை படைத்துள்ள விவசாயிகளை மாவட்ட கலெக்டர் நேரில் சந்தித்தார். பயிர் நடவு முறை, சொட்டு நீர் பாசன முறைகளின் பயன்பாடு, உற்பத்தி அதிகரிப்பு தொழில் நுட்பங்கள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து மரவள்ளி கிழங்கு மூட்டை 600 ரூபாய் அளவுக்கு தற்போது விற்பனையாகிறது. "இடைத்தரகர்களை நம்பி ஏமாந்துவிடாமல் நேரடியாக சேகோ ஃபேக்டரிகளுக்கு வழங்கினால் லாபம் கிடைக்கும். வேளாண்மை திட்டத்தை பயன்படுத்தி கொண்டு சாகுபடி செய்திட வேண்டும்' என விவசாயிகளுக்கு கலெக்டர் அறிவுரை கூறினார்

**களக்காடு வட்டார விவசாயிகளுக்கு பயிற்சி**

களக்காடு: களக்காடு வட்டாரத்தை சார்ந்த சிதம்பராபுரம் கிராம விவசாயிகளுக்கு நிலக்கடலை பயிருக்கான விதை கிராம திட்ட பயிற்சி சிதம்பராபுரத்தில் நடந்தது.பயிற்சியில் களக்காடு வேளாண்மை உதவி இயக்குநர் வேல்குமார் மானாவாரி நிலக்கடலை சாகுபடி குறிப்புகள் பற்றியும், விதை கிராம திட்டத்தின் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக விளக்கி கூறினார். பயிற்சிக்கு முன்னோடி விவசாயியான சிவசங்கரன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் அசோக் கென்னடி வரவேற்றார்.பயிற்சியில் களக்காடு வட்டாரத்தை சேர்ந்த பெண் விவசாயி வளர்மதி ரெங்கநாயகிக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மண்புழு உரம் தயாரிக்கும் உற்பத்தி கூடம் அமைத்ததற்கு ரூ.35 ஆயிரத்திற்கான அரசு மானிய காசோலை வழங்கப்பட்டது.
* களக்காடு வட்டாரம் அண்ணா மறுமலர்ச்சி திட்ட சீவலப்பேரி கிராம விவசாயிகளுக்கு களக்காடு ஊராட்சி ஒன்றிய கூட்டரங்கில் நெல் விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி நடந்தது. பயிற்சியில் நெல்லை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) துரைப்பாண்டியன் தலைமையேற்று விதை கிராம திட்டம் பற்றியும், நன்மைகள் பற்றியும் பேசினார்.

களக்காடு வேளாண்மை அலுவலர் அசோக் கென்னடி விதை கிராம திட்ட விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானிய விபரங்கள் பற்றி கூறினார். முன்னதாக களக்காடு துணை வேளாண்மை அலுவலர் நசீர் முகம்மது உசேன் வரவேற்றார். சீவலப்பேரியை சேர்ந்த 50 விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.
* களக்காடு வட்டாரம் மலையடிபுதூர் கிராமத்தில் விதை கிராம திட்ட எண்ணெய் வித்துக்கள் விவசாயிகள் முதற்கட்ட பயிற்சி மலையடிப்புதூர் பஞ்.,தலைவி சுப்புலெட்சுமி தலைமையில் நடந்தது. களக்காடு துணை வேளாண்மை அலுவலர் நசீர் முகம்மது உசேன் வரவேற்றார்.களக்காடு வேளாண்மை அலுவலர் அசோக் கென்னடி பேசுகையில், ""வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்கு 15 சதவீதம் மட்டுமே விதைகள் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 85 சதவீத பரப்பிற்கு விவசாயிகள் தனியாரிடமும், ஏற்கனவே விவசாயிகள் பயன்படுத்திய விதையையே திரும்பவும் பயன்படுத்துவதால் மகசூல் இழப்பு ஏற்படலாம். எனவே விவசாயிகள் தாங்களே சொந்தமாக விதைகள்

உற்பத்தி செய்து அதை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் இது போன்ற பயிற்சிகள் நடத்தப்படுகிறது" என்று கூறினார்.களக்காடு துணை வேளாண்மை அலுவலர் விதை கிராம திட்டங்களில் வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் பற்றி கூறினார். பயிற்சியில் மலையடிபுதூரை சேர்ந்த 50 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. களக்காடு உதவி வேளாண்மை அலுவலர் சிவராஜன் நன்றி கூறினார்.ஏற்பாடுகளை களக்காடு வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆறுமுகம், அப்துல்ரவூப், கிருஷ்ணதேவி செய்திருந்தனர்.

**களக்காடு விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு பயிற்சி**

களக்காடு: களக்காடு விவசாயிகளுக்கு உயிரியல் பாதுகாப்பு மற்றும் பயிர் பாதுகாப்பு பயிற்சி நடந்தது. நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வேலுச்சாமி அறிவுரையின்படி கட்டளை கே.பி.என். பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள செம்மை நெல் ஒருங்கிணைந்த பண்ணைய பள்ளியில் 25 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக பயிற்சி களக்காடு வேளாண்மைத்துறை அலுவலர்களால் அளிக்கப்பட்டது.இப்பயிற்சியின் போது செம்மை நெல் சாகுபடி கோட்பாடுகளான 14வது நாள் நெல் நாற்று நடவு, ஒரு நாற்று நடவு, 25க்கு 25 செ.மீ சதுர நடவு, பஞ்சு கட்டும் வரை 2 செ.மீ. உயரம் வரை நீர்கட்டி முதலில் கட்டிய நீர் வடிந்து சிறு கீறல் கண்ட பிறகு மறுபடியும் அதே அளவு நீர் கட்டுதல், பஞ்சு கட்டிய பிறகு அதாவது பொதிப் பருவத்தில் 2.5 செ.மீ (1 இஞ்ச் அல்லது 1 விரல் கடை) முதலில் கட்டிய நீர் மறைந்த பிறகு மறுமுறை நீர் நட்டுதல்.களை வேளாண்மைக்கு உருளும் களை கருவியினை 4 முறை உபயோகித்தல், மண்ணுக்கு காற்றோட்டம் கிடைப்பதற்கு வரிசைக்கு இடையே குருக்கும் நெடுக்குமாக உருளும் களை கருவியினை உபயோகித்தல், நட்ட 10வது, 20வது, 30வது, 40வது நாள் வரிசைக்கிடையே உருளும் களை கருவியினை உபயோகித்தல், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா முதலான உயிர் உரங்கள், மண்புழு உரம், தக்கைப் பூண்டு, கொளுஞ்சி, சணப்பு முதலான பசுந்தாள் உரங்கள், சூடோமோனஸ் ஃப்ளூரசன்ஸ், பேஸிலஸ் முதலான பாக்டீரியா, டிரைக்கோடெர்மா விரிடி முதலான பூஞ்சானங்கள் பயன்படுத்துதல்.
பச்சை நிற அட்டை உபயோகித்து நெற் பயிருக்கு தேவையான போது மட்டும் மேலுரமாக தழைச்சத்து (நைட்ரஜன்) தரும் யூரியா முதலான ரசாயன உரங்களை வயலில் இடுதல் ஆகியன குறித்து களக்காடு வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன், துணை வேளாண்மை அலுவலர்கள் நசீர் முகம்மது உசேன், சிவராஜன், பிரஜா, சுசிலா தங்கலின்டா ஆகியோர் பேசினர்.ஏற்பாடுகளை வேளாண்மை துறையினர் செய்திருந்தனர்

**எந்த ஆலைக்கும் கரும்பு வழங்கலாம் : உத்தரவு வழங்குவாரா தமிழக முதல்வர்**

பேரம்பாக்கம் : "கரும்பை நட்டு, கடனைக் கட்டு' என்பது கிராமத்து பழமொழி. ஆனால், கரும்பு விவசாயிகள் கூறுவதோ," கரும்பை நட்டு, கடனை வாங்கு' என புதுமொழி கூறுகின்றனர். கரும்பே வேண்டாம் என சத்தமில்லாமல் அந்த சாகுபடியை மூட்டை கட்டி விட்டனர் பல விவசாயிகள். உத்தரபிரதேசம், ஆந்திரா, மகாராஷ்ர மாநிலங் களில் எல்லாம், மாநில அரசு கரும்புக்கு, 1,550  ரூபாய் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 19 கூட் டுறவு சர்க்கரை ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகள் மூலம் ஒரு டன் கரும்பில், 85 கிலோ முதல் 100 கிலோ வரை சராசரியாக சர்க்கரை உற்பத்தி செய் யப்படுகிறது. மேலும் கரும்புச் சக்கை, மொலாசஸ் மூலமும் லாபம் கிடைக்கிறது. இவ்வளவு கிடைத்தும் விலையை கூட்டிக் கொடுக்க தமிழக அரசு தயங்குகிறது. தனியார் சர்க்கரை ஆலைகளில் ஒரு டன் கரும்பு, இரண்டா யிரத்துக்கு மேல் கொடுத்து வாங்குகின்றனர். எனவே, குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்ட கரும்பு ஆலைக்குத் தான் கரும்பு கொடுக்க வேண் டும் என்ற உத்தரவை நீக்கி விட்டு, எந்த ஆலைக் கும் விவசாயிகள் கரும்பை வழங்கலாம் என முதல்வர் உத்தரவு வழங்க வேண்டும் என கரும்பு விவசாயிகள் கூறுகின்றனர். ஓட்டலில் மசாலா தோசையின் விலை 25 ரூபாய் இந்த தோசைக்கு விலையை நிர்ணயிப்பது ஓட் டல் முதலாளி. அதற்கான உரிமை அவருக்கு இருக்கிறது. ஆனால், தோசைக்கு தேவையான அரிசி, உளுந்து, உருளைக்கிழங்கு, வெங்காயம் என எல்லாவற்றையும் உற்பத்தி செய்து கொடுப் பது விவசாயிகள்.
ஆனால், அதற்கான விலையை நிர்ணயிப்பது அரசு தான். ஏன் இதற்கு நாங்கள் விலை நிர்ணயம் செய்யக்

கூடாதா? எங்களுக்கு எங்கு கூடுதல் விலை கிடைக்கிறதோ அங்கு நாங்கள் விற்கக்கூடாதா என கண்ணீருடன் புலம்பும் கரும்பு விவசாயிகளுக்கு, எந்த ஆலைக்கும் கரும்பு வழங்கலாம் என முதல்வர் உத்தரவு வழங்குவாரா...?

**கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் ரூ. 18 லட்சம் 'பஞ்சு' விற்பனை**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் நேற்று 18 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு விற்பனையானது. விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற் பனை கூட்டுறவு சங்கத் தின் மூலம் கடந்த மாதம் 16ம் தேதி பருத்தி வாரச் சந்தை துவங்கியது. புதன் கிழமைதோறும் வரும் ஜூன் மாதம் வரை பருத் திச் சந்தை நடக்கின்றது. சந்தை துவங்கிய மூன்று வாரங்களில் 79 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு விற்பனையானது. பொங்கல் பண்டிகையொட்டி கடந்த 13ம் தேதி பருத்தி சந்தை ரத்து செய்யப்பட்டது. வழக் கம் போல் நேற்று நடந்த பருத்தி சந்தையில் 470 விவசாயிகள் 1,700 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். நேற்று 18 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் விற்பனையானது. ஒரு குவிண்டால் பருத்தி அதிகபட்சம் 3,459 ரூபாய்க்கும், குறைந்த பட்சம் 2,911 ரூபாய்க்கும் விற்பனையானது.பருத்தி சந்தை துவங்கி நான்கு வாரத்தில் 2,140 விவசாயிகள் மூலம் 9,377 பஞ்சு மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப் பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவ முகாம்**

மடத்துக்குளம் : கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ராஜாவூரில் நடந்த கால்நடைமருத்துவ முகாமில் 488 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.
மடத்துக்குளம் அருகே ராஜவூரில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. முகாமில், கோமாரி நோய் தடுப்பூசி 138 கால்நடைகளுக்கும், 292 ஆடுகள் மற்றும் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப் பட்டது. 20 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், 38 கால்நடைகளுக்கு சினை பரிசோதனை மற்றும் மலடு நீக்க சிகிச்சை மேற்கொள்ள பட்டது. மடத்துக்குளம் கால்நடை மருந்தக டாக்டர் முருகேசன் தலைமையிலான குழுவினர் சிகிச்சை அளித்தனர். கால்நடை பராமரிப்பு மற்றும் தீவன பயிர் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

மைவாடி, போளரப்பட்டி, ராஜாவூர் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களை சேர்ந்த 488 கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டது. சிறந்த கிடேரி கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் அளிக்கப்பட்டன.

தினகரன்

**சரத் பவார் தகவல் வட மாநிலங்களில் பால் விலை உயரும்**

பதிவு செய்த நாள் 1/21/2010 12:38:32 AM



புதுடெல்லி: பால் பற்றாக்குறை காரணமாக வட மாநிலங்களில் பால் விலையை உயர்த்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மத்திய விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.
இது குறித்து சரத் பவார் அளித்த பேட்டியில் கூறியதாவது:

வட மாநிலங்களில் பாலுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பாலின் தேவைக்கும் இப் போது விநியோகமாக்கும் பாலுக்கும் இடையே 18 லட்சம் டன் பால் பற்றாக்குறை உள்ளது. இதற்கு மாநில அரசுகளே காரணம். தேவையான அளவு பால் உற்பத்தியை அதிகரிக்க மாநில அரசுகள் நட வடிக்கை எடுக்கவில்லை. கடுமையான பற்றாக்குறை காரணமாக வட மாநிலங்களில் பால் விலையை உயர்த்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.
இவ்வாறு சரத் பவார் கூறினார். இதையடுத்து, வட மாநிலங்களில் விரைவில் பால் விலை உயர்த்தப்ப டும் என்று தெரிகிறது. இதனிடையே, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை மத்திய அரசு கட்டுப்படுத்தாததைக் கண்டித்து போராட்டம் நடத்த பா.ஜ. தயாராகி வருகிறது.

**இந்தியாவில் இருந்து இறக்குமதி அதிகரிக்கும்**

பதிவு செய்த நாள் 1/21/2010 2:00:35 AM



பெய்ஜிங்: இந்தியாவில் இருந்து கூடுதலாக பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்வோம். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை சீன அரசு எடுக்கும் என சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மாவிடம் உறுதி அளித்தார்.

இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா இந்திய சீன கூட்டுப் பொருளாதாரக் குழு கூட்டத்துக்காக சீனாவுக்குச் சென்றுள்ளார். அவர் பெய்ஜிங் நகரில் சீன பிரதமர் வென் ஜியாபாவோவை சந்தித்தார். அப்பொழுது இருதரப்பு வர்த்தகம் பற்றிய இந்திய நிலையை தெளிவுபடுத்தினார். இரு தரப்பு நேரடி வர்த்தகத்தில் இந்தியாவின் மிகப் பெரிய கூட்டா ளியாக இருப்பது சீனாதான். இந்த இரு தரப்பு வர்த்தகத்தில் இந்தியா பற்றாக்குறை வர்த்தகம் நடத்துகிறது. அதன் இறக்குமதி மிக அதிகமாகவும் ஏற்றுமதிகள் மிக் குறைவாகவும் இருப்பதுதான் காரணம். 2008&09ம் ஆண்டில் இந்த வர்த்தகப் பற்றாக்குறை 700 கோடி டாலர் அளவை எட்டிவிட்டது. இந்திய பற்றாக்குறை வர்த்தகத்தின் அளவு குறைய வேண்டும். இந்தியாவிலிருந்து பொருட்களையும் சேவைகளையும் கூடுதலாக இறக்குமதி செய்ய சீனா முன்வரவேண்டும் என ஆனந்த் சர்மா குறிப்பிட்டார்.
இருதரப்பு வர்த்தகத்தில் இருக்கும் பற்றாக்குறை நிலையைப் போக்க சீனா செய்ய வேண்டிய அனைத்தையும் செய்யும் என ஆனந்த் சர்மாவிடம் சீனப்பிரதமர் உறுதி அளித்தார். இருதரப்பு வர்த்தகம் சமச்சீரான நிலையை அடைய இரு தரப்பினரும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ குறிப்பிட்டார்.

**வேளாண் பல்கலை முத்தமிழ்விழா துவக்கம்**

பதிவு செய்த நாள் 1/21/2010 4:52:49 AM

கோவை: கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவர் மன்றம் சார்பில் இரண்டு நாள் முத்தமிழ் விழா பல்கலைக்கழக அரங்கில் நேற்று துவங்கியது.வேளாண் கல்லூரி முதன்மையர் ஜெயபால்

வரவேற்றார்.துவக்கவிழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்து பேசினார். ரூட்ஸ் நிறுவன மனிதவளமேம்பாட்டுத்துறை தலைவர் கவிதாசன் இளையதலைமுறை புத்தகத்தை வெளியிட்டு பேசினார். விழாவையொட்டி சிறப்பு ஓவியகண்காட்சி நடந்தது. பின்னர் கவிஞர் பிறைசூடன் தலைமையில் கவியரங்கம் , எஸ்.வி.சேகர் தலைமையிலான நாடகம் நடந்தது. மாலையில் திண்டுக்கல் லியோனி தலைமையில் பட்டிமன்றம் நடந்தது.இரண்டாம் நாளான இன்று காலை 10 மணிக்கு நாடகப்போட்டி நடக்கிறது. இயக்குனர் மனோபாலா நடுவராக பங்கேற்கிறார். பகல் 2 மணிக்கு விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணன் பங்கேற்கும் நாட்டுப்புற கலைநிகழ்ச்சி நடக்கிறது. மாலை 4.30 மணிக்கு நடைபெறும் நிறைவு விழாவில் சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் தங்கராசு போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பேசுகிறார்.மாணவர் மன்ற செயலர் ராஜராஜேஸ்வரி நன்றி கூறுகிறார்.

## *ஏப்ரல் – நவம்பர் மாத காலத்தில்*

## *மிளகு ஏற்றுமதியில் 23 சதவீதம் சரிவு*

*எஸ் சனந்தகுமார்*
*கொச்சி*

*சென்ற ஆண்டின் ஏப்ரல்–நவம்பர் மாத காலத்தில், நம் நாட்டிலிருந்து 13,000 டன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய 2008–ஆம் ஆண்டின் இதே காலத்தில் 16,883 டன்னாக இருந்தது. ஆக, மிளகு ஏற்றுமதி 23 சதவீதம் சரிவடைந்துள்ளது.*
*அளிப்பு அதிகரிப்பு*

*நடப்பு முழு நிதி ஆண்டிலும், சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் மிளகு ஏற்றுமதி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற நிதி ஆண்டில் இதன் ஏற்றுமதி 25,250 டன்னாக இருந்தது. ஏற்றுமதி குறைந்து போயுள்ளதால், உள்நாட்டில் மிளகு அளிப்பு அதிகரித்துள்ளது. இதனால் மிளகு விலை 4 சதவீதம் சரிவடைந்துள்ளதாக தெரிகிறது. குளிர்காலத்தில் மிளகு வர்த்தகர்கள் 5,000 டன் மிளகு விற்பனையாகும் என எதிர்பார்த்தனர். எனினும் தேவைப்பாடு மிகவும் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பிற நாடுகளிலிருந்து மிளகை அதிக அளவில் இறக்குமதி செய்கின்றன. இந்த நாடுகள் கடந்த சில மாதங்களாக வியட்நாம் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் இருந்து போதிய அளவு மிளகை வாங்கியுள்ளன. இதனால் கிறிஸ்துமஸ் பண்டிகைக்குப் பிறகு இந்த நாடுகளில் தேவைப்பாடு உயரவில்லை. இதனால் நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் மிளகு ஏற்றுமதி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*வியட்நாம்*

*மேலும் சர்வதேச சந்தையில் வியட்நாம் நாட்டின் மிளகை விட இந்திய மிளகின் விலை அதிகமாக உள்ளது. இந்திய மிளகின் விலை டன் ஒன்றுக்கு 3,000 டாலராக உள்ள நிலையில், வியட்நாம் நாட்டின் மிளகு விலை 2,800 டாலர் என்ற அளவில் குறைவாக உள்ளது.*
*உள்நாட்டில் மிளகிற்கான தேவைப்பாடு 40,000 டன்னாக உள்ளது. இந்நிலையில், நடப்பு நிதி ஆண்டில் நம் நாட்டில் 55,000 டன் மிளகு உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டைக் காட்டிலும் 5,000 டன் அதிகமாகும்.*